வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 21 பக்கங்கள் : 16





08 பொது மன்னிப்பு அதிகாரத்துக்கு கடிவாளம் போடும் நீதித்துறை!


09 ஜனாதிபதித் தேர்தலில் நான்கு வகை வேட்பாளர்கள்!


10 அயோத்தி இராமர் கோயில்! வால்மீகியை வானுயர வைத்துள்ள பிரதமர் மோடி !


11 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஒழிக்கப்பட்டால்....?

## தமிழரசு தலைவர் தேர்தலிலிருந்து நான் ஒருபோதுமே விலகவில்லை!

### இன்று நடக்கும் போட்டியில் நிச்சயம் வெல்வேன் என்கிறார் சிறிதரன் எம்.பி.

கிளிநொச்சி, ஜன. 21

"திருகோணமலையில் இன்று நடைபெறும் தமிழரசுக் கட்சித் தலைவர் தேர்தலில் இருந்து நான் ஒருபோதுமே விலகவில்லை. தேர்தலில் இருந்து நான் விலகுவதாக சில ஊடகங்களில் வெளியான தகவல்கள் பொய்யானவை. இன்றைய தேர்தலில் நான் நிச்சயம் வெற்றி பெற்று தலைவராவேன்."

- இவ்வாறு தெரிவித்தார்

15

## பராக்கிரமபாகு மன்னனுக்கு பின் செங்கடலுக்கு கப்பலை அனுப்பிய முதல் ஜனாதிபதி நான்தான்!

### ரணில் பெருமிதம்

கொழும்பு, ஜன. 21

செங்கடல் நெருக்கடியால் கொழுந்து விட்டு எரியும் போர்த் தீ பரவி வருகிறது. தற்போது, மத்திய கிழக்கில் நடைபெற்று வரும் போரில் ஈடுபட்டுள்ள நாடுகளில் இலங்கையும் உள்ளது. இஸ்ரேல், பாலஸ்தீனிய ஹமாஸ், அமெரிக்கா, ஏமன், ஈரான், லெபனான், இங்கிலாந்து, பாகிஸ்தான், இந்தியா ஆகியவை இதில் அடங்கும். இது தொடர்பாக இலங்கை நடுநிலையான நிலைப்பாட்டை எடுக்காது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பராக்கிரமபாகு மன்னனுக்குப்

15

# இந்திய மீனவர்கள் விடயத்தில் மனித நேயத்துடன் நடவுங்கள்!

## மோதல் போக்கை கடைப்பிடிக்கவேண்டாம்: இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது இந்தியா!



புதுடில்லி, ஜனவரி 21

**"இந்திய மீனவர்களின் வாழ்வாதார நிலையைக் கருத்தில் கொண்டு, மனித நேயத்துடன் நடந்துகொள்ளவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், எந்தச் சூழ்நிலையிலும் மோதல் போக்கை கடைப்பிடிக்கக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது."**

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்பரப்பில் தொடர் தாக்குதல் நடத்தப்படுவது தொடர்பாக வைகோ எழுப்பிய கேள்விக்கு வழங்கிய பதிலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்த அறிக்கையில் கூறியதாவது:-

இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த உங்கள் கவலைகளை நான் முழுமையாகக் கவனத்தில் கொள்கிறேன்.

இந்திய ஒன்றிய அரசு, இந்திய மீனவர்களின் பாதுகாப்பு நலன் குறித்து அதிக அக்கறை எடுத்து வந்துள்ளது என்பதை உங்களுடைய கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

15

## நல்லெண்ண அடிப்படையில் 40 இந்திய மீனவர் விடுவிப்பு

கொழும்பு, ஜன. 21

வடக்கு கடற்பரப்பில் அண்மையில் கைது செய்யப்பட்ட 40 இந்திய மீனவர்களையும் விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நல்லெண்ண அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதற்கமைய, நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் குறித்த 40 இந்திய மீனவர்களும் விடுவிக்கப்படுவார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில், மன்னாரில் 2 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 18 மீனவர்களும்

15

## ஜனாதிபதித் தேர்தலுக்கு 1000 கோடி ரூபா செலவு

கொழும்பு, ஜன. 21

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு சுமார் ஆயிரம் கோடி ரூபா வரை செலவாகும் என தற்போது மதிப்பிட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு தேவையான நிதி 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்திலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையால் நாடு அழிவு

### இரத்துச் செய்தால் ரணிலை ஆதரிப்பேன் என்கிறார் ராஜித

கொழும்பு, ஜன. 21

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இரத்துச் செய்யும் நபருக்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்க தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித

15



## பிரித்தானிய கட்டுப்பாட்டு தீவில் தவிக்கும் இலங்கை தமிழர்கள்!

கொழும்பு, ஜன. 21

இந்தியப் பெருங்கடல் பகுதியில் பிரித்தானிய கட்டுப்பாட்டில் இருக்கும் டியாகோ கார்சியா தீவில் உள்ள முகாம், புலம்பெயர்ந்தோரை நீண்ட காலம் தங்க வைக்க ஏற்ற இடம் அல்ல என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

15

## அமைச்சரவை மாற்றம்!

### மொட்டு கட்சியில் பலருக்கு பதவி

கொழும்பு, ஜன. 21

அமைச்சரவையில் அடுத்த மாதம் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த மாற்றத்தில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு அமைச்சுப்

15

## ஜனாதிபதித் தேர்தலில் தேசியவாத வேட்பாளர்?

கொழும்பு, ஜன. 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசியவாத வேட்பாளரை முன்வைக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தயாராகி வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று

15

## இலங்கையில் 46 வீதத்தால் அதிகரித்த பொருள் விலை!

கொழும்பு, ஜன. 21

இலங்கையில் ஒரு வருடத்துக்குள் அத்தியாவசிய மளிகைப் பொருட்களின் விலை நாற்பத்தாறு வீதத்தால் (46%) அதிகரித்துள்ளதாக நாட்டில் பொருட்களின் விலை தொடர்பான

15

# இப்படியும் நடக்கிறது

சிவாஜி கணேசனும் எம்.ஜி.ஆரும் சினிமாவில் கோலோச்சியபோது இருவருக்காகவும் பின்னணி பாடியவர் டி.எம். சௌந்தரராஜன். அவரைத் தவிர்த்து பலர் படினாலும் அவர் மாத்திரமே அனைவருக்கும் தெரிந்தவராக இருந்தார்.

அவருக்குப் பின்னர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் கே.ஜே. ஜேசுதாஸ் என்று இருவரே நமக்கு ஞாபகம் வருவார்கள்.

ஆனால் இப்போது அப்படி யாரைச் சொல்வதென்று தெரியவில்லை. அதே போலத்தான், இசையமைப்பாளர்களும். எம்.எஸ் விஸ்வநாதனுக்குப் பிறகு, இளையராஜா - தேவா என்றும் பின்னர் ஏ.ஆர். ரஹ்மான், அனிருத் என்றும் நமக்கு ஒரு சிலரே ஞாபகத்திற்கு வருவர்.

சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற ஒரு இசைநிகழ்ச்சிக்கு போகவேண்டும் என்று தனது பதின்ம வயது மகன் அடம்பிடிக்கிறான் என்றும், அதற்காக பதினைந்து ஆயிரம் ரூபாவுக்கு ரிக்கெட் கேட்கிறான் என்றும் கொழும்பிலிருந்து நண்பர் ஒருவர் போனில் கேட்டார்.

அப்படி அவன் சொல்கின்ற பாடகர் பற்றியும் தான் அறிந்திருக்கவில்லை. ஆனால் இவ்வளவு பெரிய தொகை ரிக்கெட் போடுகிறார்களா என்ற சந்தேகம் அந்த நண்பருக்கு.

"நிகழ்ச்சிக்கு டான் ரிவி அனுசரணை வழங்குகின்றதாமே. அது உண்மைதானா? என்று கேட்டுச் சொல்லுங்கள்" என்றார் நண்பர்.

அவருக்கு மகன் உண்மை சொல்கிறானா என்பதை அறிய ஆவலாக இருந்திருக்க வேண்டும். இந்த ஊர்க்குருவியும் அப்படியொரு பாடகரை அறிந்திருக்கவில்லை.

எனக்கும்தான் சந்தேகம். டான் ரிவி முகாமையாளரிடம் கேட்டபோது அவர் அது சரிதான் என்று உறுதிப்படுத்தியதுடன், ரிக்கெட்டுக்கள் விற்று முடிந்துவிட்டதே என்றார்.

இப்போதெல்லாம் ஒரு பாடகர் ஒரு பாடலை பாடி அது 'ஹிட்' ஆகிவிட்டால் இளைஞர்கள் அவரை தூக்கி தலையில் வைத்து கொண்டாடுகின்றார்கள். அந்த பாடகர் பிரதீப் குமாரின் நிகழ்ச்சியை நடத்தியவர் நிகழ்ச்சி முடிவில் பல லட்சங்களை லாபமாகப் பார்த்தார் என பின்னர் தெரிய வந்தது.

அதனையடுத்து ஒரு தனிப்பட்ட நபர், பாடகர் ஹரிகரனின் நிகழ்ச்சி ஒன்றை கொழும்பில் நடத்தினார். அவரது சகோதரர் ஒரு திருமண வைபவத்தில் சந்தித்தபோது சொன்னார், தான் தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த பணத்தை விட அதிகமான தொகையை தனது தம்பி அந்த இசை நிகழ்ச்சியில் உழைத்தார் என்று.

அவர் அடுத்தமாதம் இளையராஜாவின் புதல்வர் யுவன் சங்கர் ராஜாவின் இசைநிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்.

இவைபற்றியெல்லாம் எதற்காக இங்கே எழுதிக்கொண்டிருக்கின்றேன் என்று நீங்கள் கருதலாம். அண்மையில் நமது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினர் ஓர் இசைநிகழ்ச்சியை நடத்தினார்கள். பிரபல இசையமைப்பாளர் இம்ரான் வழங்கிய அந்த இசை நிகழ்ச்சி டிசெம்பர் மாதம் முப்பதாம் திகதி நடைபெற்றது.

பழையமாணவர் சங்கங்களும் அதுபோன்ற அமைப்புக்களும் தமது நிதி மூலத்தை அதிகரிப்பதற்காக இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது வழக்கமானதுதான்.

இந்துக் கல்லூரி என்பது யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியத்தின் முகம் போன்றது. அந்தக் கல்லூரியில் கல்வி கற்றவர்கள் இன்று பல்வேறு இடங்களிலும் உச்சநிலையில் இருப்பார்கள்.

அவர்களின் சங்கம் ஒன்று இசைநிகழ்ச்சி நடத்துகின்றது என்றால் நிச்சயம் அதற்கான திட்டமிடலும் ஒழுங்கமைப்பும் சரியாகத்தான் இருந்திருக்கும் என்று எல்லோரும் நினைப்பார்கள்; நம்புவார்கள்.

ஆனால், அந்த நிகழ்ச்சி முடிந்த பின்னர் முதல் கட்ட வரவு - செலவு கணக்கு அதன் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டபோதுதான் தெரியவந்தது சுமார் இரண்டு கோடி ரூபாவை அந்த நிகழ்ச்சி விழுங்கிவிட்டது என்பது.

அந்த நிகழ்ச்சியை சங்கத்திலுள்ளவர்கள் எல்லாம் நன்றாக ஆராய்ந்து, சரியாக திட்டமிட்டுத்தான் செய்தார்களா என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

அப்படி திட்டமிட்டிருந்தால், டிசெம்பர் முப்பதாம் திகதி நிகழ்ச்சியை நடத்தியிருப்பார்களா என்று தெரியவில்லை.

எல்லோரும் கொழும்பிலிருந்து வெளியூர்களுக்கு புறப்படுகின்ற காலம் அது. அது மட்டுமன்றி இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில், டிசெம்பர், ஜனவரி மாதங்கள் குடும்பங்களுக்கு அதிகூடிய செலவுள்ள மாதங்கள். அந்த மாதத்தில் மேலதிகமாக ஒவ்வொரு ரிக்கெட்டுக்கும் பத்தாயிரம் ரூபாவை செலவுசெய்து வாங்குவதற்கு முடியுமா? அதுவும் ஒரு குடும்பத்தில் நால்வர் இருந்தால் அது சாத்தியமாகுமா? இப்படி எந்தக் கேள்வியையும் தமக்குள் கேட்டுப்பார்க்காமலே நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இதுபோலவே பல விடயங்களிலும் எங்கோ சறுக்கல்கள் ஏற்பட்டிருப்பதாகவே தெரிகின்றது. நிதி திரட்டுவதற்காக திட்டமிடப்படாது செய்யப்பட்ட ஒரு களியாட்ட நிகழ்ச்சியால், நிதி நெருக்கடியை அல்லவா எதிர்கொள்ளவேண்டி வந்திருக்கின்றது. இந்த இழப்பை எப்படி சரிசெய்வது என்று சங்கத்திலுள்ளவர்கள் தலையை பிசைந்துகொண்டு இருக்கிறார்களாம்.!

**- ஊர்க்குருவி.**

# தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக நீதிமன்றம் சென்றார் முஜிபுர் ரஹ்மான்!

## பொலிஸ் மா அதிபராக நியமிப்பதை தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை

கொழும்பு, ஜன. 21

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக நியமிப்பதை தடுத்து நிறுத்தும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில், சட்டமா அதிபர், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஒருவருக்கு கொடூரமான சித்திரவதை கொடுக்கப்பட்ட நிலையில், அந்த நபர் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கல் தேசபந்து தென்னக்கோனுக்கு இழப்பீடு செலுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் கோட்டா கோ கம போராட்ட களத்தின் மீது தாக்குதல் நடத்த சென்றவர்களை தடுத்து நிறுத்த தவறினார் எனவும் அவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இப்படியான நிலைமையில், தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக நியமித்தால், சட்டம் வீழ்ச்சியடையும் என்பதுடன் அதன் ஊடாக மக்கள் அடிப்படை உரிமைகள் மீறப்படலாம் எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதனால், இந்த மனுவை விசாரணைக்கு எடுக்க அனுமதி வழங்குமாறு அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என அறிவித்து,தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படுவதை தடுத்து இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறும் முஜிபுர் ரஹ்மான் தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

(அ)

# பன்னங்கண்டி கழிவு வாய்க்காலில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞன்!

கிளிநொச்சி, ஜன. 21

கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில் இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி பாடசாலைக்கு முன்பாக உள்ள கழிவு வாய்க்கால் ஒன்றிலேயே இளைஞனின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த நபரை நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் மக்கள் இறுதியாக அவதானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், குறித்த இளைஞன் நேற்றுக் காலை சடலமாக காணப்படுவது அவதானிக்கப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் மருதநகர் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# அறுவடை நேரத்தில் பெய்த மழை கிளிநொச்சி விவசாயிகள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜன. 21

நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது.

இந் நிலையில் அறுவடை நேரத்தில் மழை பெய்வதால் கிளிநொச்சியில் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது காலபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக நெல் காய விடும் தள வசதியின்மையால் வீதியில் காயவிடப்பட்ட நெல் மழையில் நனைந்துள்ளது.

பரந்தன்ம்-பூநகரி வீதியில் விவசாயிகளினால் காயவிடப்பட்ட நெல்களே இவ்வாறு மழையில் நனைந்துள்ளன.

நோய்த்தாக்கத்திற்கு மத்தியில் குறைந்த விளைச்சலோடு அறுவடை செய்த நெல்லை காயவிட்ட போதே மழையில் நனைந்துள்ளது. இந்த போகத்தில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளதாக தெரிவித்ததுடன் தமக்கான நஷ்டஈட்டை வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# இந்தியா - மாலைதீவு முறுகல் நிலையை சமாளிக்க இலங்கை இராஜதந்திர நகர்வு

கொழும்பு, ஜன. 21

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக மொஹமட் முய்ஸூதெரிவு செய்யப்பட்டதில் இருந்து இந்தியாவிற்கும் மாலைத்தீவிற்கும் இடையே பதற்றம் வெடித்தது.

அவர் சீனாவுக்கு ஆதரவான கொள்கையை வெளிப்படையாக பின்பற்றி வருவதாலும், இந்திய துருப்புக்கள் தனது நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று விடுத்த அறிவிப்பாலும் இருநாடுகளும் இடையிலான பதற்றம் அதிகரித்தது.

கடந்த 4 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி லட்சத்தீவில் கடற்கரைகளின் அழகைப் புகழ்ந்து சமூக ஊடகங்களில் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களை பகிர்ந்திருந்தார்.

இதனை மாலைதீவின் அமைச்சர்கள் மோசமான வார்த்தைகளில் விமர்த்தை தொடர்ந்து இருநாடுகளும் இடையிலான பதற்றம் மேலும் முற்றியதுடன், இராஜதந்திர உறவுகளிலும் முறிவு ஏற்பட்டது.

இந்நிலையில், பிராந்திய அமைதிக்காக இந்தியாவிற்கும் மாலைதீவிற்கும் இடையிலான பதற்றத்தைத் தணிப்பதில் சாதகமான பங்கை வகிக்க இலங்கை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

உகண்டாவில் அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தூதுவில் இடம்பெற்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, மாலைத்தீவு வெளியுறவு அமைச்சர் மூசா ஜமீரைச் சந்தித்து இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

பிராந்திய நாடுகளின் நலன் மற்றும் பிராந்திய அமைதி, ஸ்திரத்தன்மையின் அவசியத்தை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இதன்போது வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை உகண்டாவில் சந்திக்க உள்ளதாக தெரிய வருவதுடன், இதன்போது மாலைதீவு விவகாரம் குறித்து கலந்துரையாடல்களை நடத்துவார் எனவும் அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

(அ)

# யாழ்ப்பாணத்தில் கடைகளை எரிக்க ரூ.19 இலட்சம் பேரம்!

## பெல்ஜியத்தில் ஒருவரை இன்டர்போலின் உதவியுடன் கைது செய்ய யாழ்ப்பாண பொலிஸ் நடவடிக்கை

**யாழ்ப்பாணம், ஜன. 21**

**யாழ்ப்பாணம் நகரப்பகுதியிலுள்ள பிரபல்யமான ஆடை விற்பனை நிலையங்கள், கார் மற்றும் வீடுகளை எரித்த குற்றச்சாட்டில் 3 பேரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

யாழ்ப்பாண நகரப்பகுதியில் உள்ள இரண்டு கடைகள் அண்மையில் எரிக்கப்பட்டன. இதன் போது ரூ.2 கோடி பெறுமதியான சொத்துக்கள் எரித்து அழிக்கப்பட்டன. அத்துடன் கார் ஒன்றும் எரித்து அழிக்கப்பட்டன. அத்துடன், மோட்டார் சைக்கிள் ஒன்றும் பறித்தெடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தது.

விசாரணை மேற்கொண்ட பொலிஸார் 3 பிரதான சந்தேக நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 2 மோட்டார் சைக்கிள்கள், ஒரு வாள் என்பன மீட்கப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேகநபர் ஒருவரின் பெரியம்மா பெல்ஜியத்தில் வாழ்ந்து வருவதும், அவருக்கு தெரிந்தவர் ஒருவரின் தேவைக்கு அமைய, கூலிப் படையாக யாழ்ப்பாண ரௌடிகள் செயல்பட்டமை தெரியவந்தது.

கடைகளை எரிப்பதற்கு ரூ.12 இலட்சமும், வாகனங்களை எரிப்பதற்கு ரூ.7 இலட்சமும் வழங்கலாம் என பெல்ஜியம் நபர் ஒப்பந்தம் பேசியுள்ளார். முதற்கட்டமாக ரூ.1.5 இலட்சம் பணம் வழங்கப்பட்டுள்ளது. சந்தேகநபரின் வங்கிக் கணக்குக்கு இந்த பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த குற்றச்செயலில் சூத்திரதாரியான பெல்ஜியம் வாழ் நபரை, இன்டர்போலின் உதவியுடன் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கையெடுத்துள்ளனர்.

# மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்றார் அநுரகுமார

கொழும்பு, ஜன. 21

"புதியதொரு மாற்றத்தை நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர், அந்த மாற்றத்தை இந்த வருடம் ஏற்படுத்த முடியும் என நம்புகின்றோம்." - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.


அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களை நேற்றுமுன்தினம் சந்தித்து ஆசிபெற்றார் அநுர குமார திஸாநாயக்க. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லால் காந்தவும் கலந்துகொண்டிருந்தார்.

மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிபெற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அநுரகுமார திஸாநாயக்க,

"வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீட்கவேண்டிய தேவைப்பாடு எமக்கு உள்ளது, நாட்டு மக்களும் புதியதொரு மாற்றத்தையே எதிர்பார்க்கின்றனர். மக்களின் எதிர் பார்ப்பும், எமது எண்ணமும் ஒன்றாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 18 தடவைகளுக்கு மேல் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளார், அரச தலைவர்கள் வராத நாடுகளுக்குகூட சென்று உரையாற்றுகின்றார், அதாவது அவர் ஜனாதிபதி பதவியை தற்போது அனுபவிக்க தொடங்கியுள்ளார்.

அடுத்து என்ன தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார். ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் எனக் கருதுகின்றனர், நாடாளுமன்ற தேர்தலுக்கும் அஞ்சுகின்றனர், ஒத்திவைக்கப்பட்ட உள்ளாட்சிச் சபைத் தேர்தலை முதலில் நடத்துமாறு வலியுறுத்துகின்றோம்." - என்றார். (அ)



# செம்மணிச் சந்தியில் பொலிஸ் விசேட சோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 21

நாட்டில் போதைப் பொருள் விநியோகத்தை கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸ் மா அதிபரின் விசேட பணிப்புரையின் கீழ் நாடு பூராகவும் 6.00 மணி தொடக்கம் இரவு10.00 மணி வரை பயணிகள் பேருந்துகள் பொலிஸாரால் மோப்பநாயின் உதவியுடன்பரிசோதிக்கப்படும் நிலையில்

யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியில் யாழ் வரவேற்பு வளைவு அமைந்துள்ள செம்மணி சந்திப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறும் அனைத்து பேருந்துகளும் சோதனையிடும் நடவடிக்கை நேற்று முன் தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் அனும்பமால் தலைமையிலான போக்குவரத்து பொலிஸாரால் பேருந்துகளில் பயணிப்போரின் உடைமைகள் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டதோடு பேருந்துகளும் முழுமையான பரிசோதனைக் குட்படுத்தப்பட்டன.

மோப்ப நாயின் உதவியுடன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மக்கள் துன்பத்தில் வாடும்போது அக்கறையின்றி அரசியல்வாதிகள்

## கலாநிதி ஆறுதிருமுருகன் விசனம்

யாழ்ப்பாணம், ஜன. 21

மக்கள் துன்பத்தில் வாடும் நிலையில் அரசியல்வாதிகள் அக்கறையில்லாது இருக்கிறார்கள் என செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி, வரி அதிகரிப்பு தொடர்பாக கேட்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டை ஆள்பவர்களோ அரசியல்வாதிகளோ ஏழை மக்களை பற்றி கவலைப்படுவதில்லை. கண்ணிரை துடைப்பதற்கோ முன்வருவதில்லை. எதுவாக இருந்தாலும் மனிதனின் அடிப்படை தேவையாகிய உணவு,சுகாதாரம், இருப்பிடம் இவை முன்றிற்கும் இந்த நாட்டில் கஸ்டமான சூழல் ஏற்பட்டுள்ளது. பஞ்சம் என்பது வெளிப்படையாக தெரியா விட்டாலும் ஒருவேளை நல்ல உணவை உண்ண முடியாது தவிர்த்து வருபவர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள் .

மரக்கறியாக இருந்தால் என்ன உணவுப் பண்டங்கள் என்றால் என்ன விலைகள் மிக அதிகமாக அதிகரித்து உள்ளது. ஒரு சாதாரண பணியில் ஈடுபட்டுள்ள அன்றாட உத்தியோகம் பார்ப்பவர்கள் கூட களைப்பை போக்குவதற்கு தேநீர் அருந்தக்கூட முடியாத நிலையில் உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

இத்தகைய நிலையில் நிறுவனங்கள் அதற்கு ஏற்ப சம்பளத்தை கொடுக்க முடியாத நிலையில் வருவாய் அற்ற நிறுவனங்களாக செயற்பட்டுவருகின்றன.

வடக்கில் வந்த துன்பம் என்னவென்றால் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரிய நிறுவனங்கள் பல்பொருள் அங்காடி என்ற பெயரில் பெரிய அங்காடிகளை உருவாக்கி பணத்தை திரட்டிக் கொண்டு செல்கிறார்கள்.

இதனால் கிராமத்தில் உள்ள வர்த்தகர்கள், வாணிபர்கள், பெட்டிக்கடைகள் வியாபாரத்தை இழந்து மூடும்நிலை ஏற்பட்டுள்ளது.

உண்மையான மக்களின் உணர்வுபூர்வமான பிரச்னையை யாரும் அறிந்து கொள்வதில்லை வேடிக்கையான பேச்சுக்களை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம். கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஏழை மக்களை யாரும் திரும்பி பார்ப்பதில்லை.

இலங்கை மக்களின் மிக முக்கியமான உணவு தேவையைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கமும் அனைத்து அரசியல் தலைவர்களும் உருப்படியான வேலைகளை செய்து மூன்று வேளையும் மக்கள் கஸ்டப்படாது உணவை உட்கொள்ள வழி செய்ய முடியாத நிலையில் என்னதான் வாய் வீரம் பேசுவதனாலும் அர்த்தம் இல்லை. இத்தகைய அரசியல் சூழலால் தான் மக்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்- என்றார். (அ)

# மன்னார் - யாழ் வீதியில் விபத்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஜன. 21

மன்னார் - யாழ்ப்பாணம் வீதியில் பள்ளமடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தொன்று அதே திசையில் பயணித்த சைக்கிளுடன் மோதியதில் குறித்த விபத்து நேர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் சைக்கிளில் பயணித்த இருவரின் ஒருவர் உயிரிழந்துள்ளார் நிலையில் படுகாயமடைந்த மற்றைய நபர் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் கோவில் குளம் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளதுடன், அதே பகுதியைச்சேர்ந்த 45 வயதுடைய மற்றுமொரு நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்தை ஏற்படுத்திய பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில், விபத்து தொடர்பில் அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத்தை பலப்படுத்த பிரிட்டன் ஒத்துழைப்பு

## தூதுவர் நீதி அமைச்சரிடம் உறுதி

கொழும்பு, ஜன. 21

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்றுவ் பெற்றிக் மற்றும் நீதி, சிறைச்சாலை நடவடிக்கை அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சட்ட மறுசீரமைப்பு தொடர்பாகவும் அந்த மறுசீரமைப்பு பொருளாதார இலக்கை அடைந்துகொள்வதற்கு தாக்கம் செலுத்தும் முறை தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் பங்குபற்றலுடன் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக சட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் பரந்தளவில் கவனம் செலுத்தியிருப்பதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இதன் காரணமாக சில சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்வதில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளதையும் எடுத்துரைத்தார்.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்காக பிரித்தானியாவின் ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்குவதாக பிரித்தானிய தூதுவர் இதன் போது உறுதியளித்ததாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

# சர்வதேச தரத்தில் புதிய சட்டங்கள்!

## அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

கொழும்பு, ஜன. 21

சர்வதேச தரத்திற்கு ஏற்ப இலங்கையில் புதிய சட்டங்களை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் மார்க் - ஆன்ட்ரே - பிரான்சேவிற்கும் நீதி அமைச்சருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நீதியமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையின் நீதிச் செயற்பாட்டை வலுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் கொண்டுவரப்படும் என்றும் விஜயதாச ராஜபக்ச இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வாறு கொண்டு வரப்படுகின்ற புதிய சட்டங்கள், சர்வதேச தரத்திற்கு ஏற்பவும், வெளிப்படைத்தன்மையை பாதுகாக்கும் அடிப்படையிலும் உருவாக்கப்படுமென அமைச்சர் உறுதியளித்துள்ளார்.



எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளதாகவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கான, இலங்கையின் முயற்சிகளில் ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகள் மிகவும் முக்கியமானவை எனவும் நீதி அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

மேலும் ஐக்கிய நாடுகளின் மனநல ஆணைக்குழுவின் அனுபவம் தொடர்பிலும் இதன் போது கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாத அரசு பொதுத் தேர்தல் குறித்து தம்பட்டம் அடிக்கிறது

## சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 21

நாட்டை அழித்த வங்குரோத்தடையச் செய்த திருடர்களை பிடித்து அவர்கள் திருடிய வளங்களை இந்நாட்டின் கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்றவற்றிற்கு ஒதுக்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான நோக்கமாகும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 68 ஆவது கட்டமாக, அனுராதபுரம் ஸ்ரீ துடுகெமுணு மகா வித்தியாலயத்திற்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

'மோசடி கும்பலொன்று ஆளும் தரப்பு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் சேர்ந்து மனித இம்யூனோகுளோபுலின் உள்ளிட்ட ஏராளமான மருந்துகளில் மோசடி செய்துள்ளனர். மனித இம்யூனோகுளோபுலின் என்ற மருந்துடன் நீர் கலக்கப்பட்டுள்ளது.

ஆளும் தரப்பு அமைச்சர்கள் ஜனாதிபதியின் பாதுகாப்பில் திருடும்போது கூட ஜனாதிபதி இந்த அமைச்சர்களை வெளியேற்றாது அவர்களை பாதுகாத்து வருகிறார். மருந்துப் பொருள் மோசடி செய்த சுகாதார அமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்த போது ஜனாதிபதி, மொட்டுக் கட்சியின் 113 பேரை பயன்படுத்தி சுகாதார அமைச்சரைப் பாதுகாத்தாலும்,

சமீபத்தில், வியட்நாமில் கூடிய விலையில் கோவிட் பரிசோதனை உபகரண தொகுதிகளை கொள்வனவு செய்யும் விடயத்தில் நிதி முறைகேடு காரணமாக 22 இலட்சம் அமெரிக்க டொலர் திருடிய குற்றத்துக்காக வியட்நாம் சுகாதார அமைச்சருக்கு 18 வருடங்களும், அமைச்சருடன் இணைந்து திருட்டில் ஈடுபட்ட தொழிலதிபருக்கு 29 வருடங்களும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

வியட்நாமில் இவ்வாறு நடக்கும் போது, இந்நாட்டில் ஊழல் மோசடியில் ஈடுபட்ட சுகாதார அமைச்சரை பாதுகாக்க ஜனாதிபதி முதல் ராஜபக்ஷ,மொட்டுக் குழுவின் கையாட்கள் சகலரும் கை தூக்கி உதவினார்கள்.

வியட்நாம் இலங்கையைப் போல் வங்குரோத்தல்லாத வேகமாக அபிவிருத்தி கண்டு வரும் நாடு. இந்த அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிலும் திருட்டுக்கு தண்டனை வழங்கப்படும் போது, வங்குரோத்தான நாட்டில், மக்கள் மீது பெரும் வரிச்சுமை சுமத்தப்பட்டு திருட்டு மற்றும் கடத்தல்கள் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு கூட முதுகெலும்பில்லாத இந்த அரசாங்கம் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்று தம்பட்டம் அடித்து வருகிறது. ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தியும் மக்களும் தயாராகவே உள்ளனர்-என்றார்.(அ)

# சர்வேதச நாணய நிதிய பிரதிநிதிகளுடன் சஜித், அனுர அணிகள் கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 21

சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு மற்றும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட அதிகாரி பீட்டர் ப்ரூயர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவு எனக்கூறி மக்களுக்கு பெரும் வரிச்சுமையை ஏற்படுத்து பெறுமதி சேர் வரி உட்பட பல்வேறு வகையான வரிகளை தற்போதைய அரசாங்கம் அபரிமிதமாக அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன் காரணமாக பொதுமக்கள், கர்ப்பிணிகள், சிறு வர்கள், நடுத்தர வர்க்கம், அரச ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் அநாதரவாகியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் இடையிலான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய, தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹதுன் நெத்தி மற்றும் பலர் கலந்துகொண்டனர். (அ)

# விரைவில் டிஜிற்றல் அடையாள அட்டை!

## ஆட்பதிவு திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 21

இலங்கையில் டிஜிற்றல் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜி.பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

இதற்காக முக அடையாளம் மற்றும் கைரேகை தரவுகள் சேகரிக்கப்படும்.

இவ் வேலைத்திட்டம் இவ்வருடம் பெப்ரவரி மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன், குருணாகல் மற்றும் கண்டி மாவட்ட அலுவலகங்களில் முதற்கட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படும்.

வடமேல் மற்றும் மத்திய மாகாண அலுவலகங்களில் அறிமுகம் செய்யப்படவுள்ளதால், தேசிய அடையாள அட்டைகளின் ஒரு நாள் சேவைக்காக பொதுமக்கள் கொழும்புக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

இந்த ஆண்டு ஜூன் மாதம் இதற்காக பொதுமக்களின் முக அடையாளம் மற்றும் கைரேகை தரவுகளை சேகரிக்க உள்ளதுடன், அனைத்து மாவட்ட செயலக அலுவலகங்களாலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராக மற்றுமொரு மனு தாக்கல்

கொழும்பு, ஜன. 21

அரசாங்கத்தினால் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றில் மற்றுமொரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சோசலிச இளைஞர் சங்கத்தினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

குறித்த சட்டமூலத்திற்கு அமைய, இராணுவத்தினர், காவல்துறையினர் மற்றும் கரையோர பாதுகாப்பு படை ஆகிய தரப்பினரால் எந்த நபரையும் அடிப்படை காரணங்கள் இன்றி கைது செய்து தடுத்து வைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுவதாக மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

# இலத்திரனியல் கடவுச்சீட்டு இந்த வருடம் விநியோகம்!

கொழும்பு, ஜன. 21

இலங்கையில் இந்த வருடம் இலத்திரனியல் கடவுச் சீட்டுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஐ.எஸ். எச்.ஜே. இலுக்பிட்டிய இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இ-பாஸ்போர்ட்களை அறிமுகம் செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கையை தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# சமூக ஊடகங்களில் 100,000 இற்கும் அதிகமான ஆபாசக் காணொளிகள்!

கொழும்பு, ஜன. 21

கடந்த 2023ஆம் ஆண்டில் மட்டும் பல்வேறு நபர்கள் 100,000இற்கும் மேற்பட்ட, சிறுவர்கள் மற்றும் இளம் யுவதிகளின் அந்தரங்க காணொளிகளை சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

இந்த காணொளிகள் சிறுவர்கள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதையும் அவர்களின் அந்தரங்கத்தை வெளிப் படுத்துவதாகவும் சமூக ஊடக தளங்களில் வைரலாக பரவி வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



மேலும், இந்தக் காணொளிகளைப் பதிவேற்றியவர்களைக் கண்டறிந்து கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனடிப்படையில், சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நபர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் வலியுறுத்தினார்.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், சில தொழில் வல்லுநர்கள் கூட இந்த குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது வருத்தமளிக்கிறது.

இருப்பினும், இந்த செயல்களில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்," என்று அவர் கூறினார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
21.01.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர்கள் காண வேண்டிய தலைமை

தமிழரசு கட்சியின் புதிய தலைவர் இன்று தெரிவாகவுள்ளார். அவர் யார் என்பதை அறிவதில், எமது மக்களைப் போல் நாமும் ஆர்வமாக இருக்கின்றோம். ஓர் அரசியல் கட்சியின் தலைவர் எவ்வாறு இருக்க வேண்டும் – இருக்கக் கூடாது என்பதில் ஈழத் தமிழ் மக்களுக்கு போதுமான அனுபவங்கள் உண்டு. இலங்கை தமிழரசு கட்சியை ஸ்தாபித்த எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை ஈழத்து காந்தி என்றும் கூறினார்கள்.

சிலர் சூழ்நிலைகளால் தலைவர்கள் ஆகின்றனர் – சிலரோ குடும்ப மற்றும் சமூக பின்புலத்தால் தலைவர்கள் ஆகின்றனர். ஆனால், ஒரு சிலர்தான் இயல்பிலேயே தலைவர்களாக இருக்கின்றனர். அவ்வாறானவர்களைத்தான் ஹரிஸ்மற்றிக் தலைவர்கள் என்கின்றார்கள் – அப்படியான ஒருவர்தான் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் என்று அவரது மருமகனும் புகழ்பெற்ற அரசியல் விஞ்ஞானியுமான ஏ.ஜே.வில்சன் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான பல கதைகளை கேட்டு வளர்ந்த தலைமுறையொன்றுதான், இன்று மேற்குலக நாடுகள் எங்கும் சிதறி வாழ்கின்றது.

வில்சன் வர்ணிப்பது போன்ற, ஒரு தலைவராக செல்வநாயகம் இருந்தாரா அல்லது இல்லையா என்பது, அரசியல் வரலாற்றை ஆய்வு செய்வோருக்குரியது ஆனால் செல்வநாயகம் தனது காலத்தில் தன்னாலியன்ற அனைத்தையும் செய்து பார்த்தார் என்பதும், தனக்கு பின்னர், தான் உருவாக்கிய கட்சி சரியானதொரு தலைமைத்துவத்தின் கீழ் செல்ல வேண்டும் என்பதிலும், தெளிவான பார்வையும் உழைப்பும் அவரிடம் இருந்திருக்கின்றது. செல்வநாயகத்தினால் கண்டடையப்பட்ட, ஓர் ஆளுமைமிக்க அரசியல் தலைவர்தான் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஆவார்.

செல்வநாயகம் பற்றி ஓரிடத்தில் வில்சன் இவ்வாறு கூறுகின்றார் – அதாவது, செல்வநாயகம் எவ்வாறானதொரு தலைவர் என்றால் கேக் கிடைக்கவில்லை என்பதற்காக பாணை நிராகரிக்கின்ற தலைவர் அல்ல அவர் – என்று குறிப்பிடுகின்றார். அதாவது, சூழ்நிலைகளை புரிந்து கொண்டு அதற்கேற்பத்தான் அரசியலை முன்னெடுக்க வேண்டும் – ஒரு தலைவர் என்பவர், அதனைத்தான் செய்யவேண்டும். அப்படிப் பார்த்தால் அமிர்தலிங்கம் மட்டும்தான் செல்வநாயகம் வழிவந்த ஒரேயொரு தலைவர். ஏனெனில் தனிநாட்டுக் கோரிக்கையை நிறைவேற்றிய வரலாற்றை கொண்டிருந்த அமிர்தலிங்கத்தால் மாவட்ட சபையை நோக்கியும் செல்ல முடிந்தது. அதற்கான துணிவு அவரிடம் இருந்தது. ஆனால், அமிர்தலிங்கத்திற்கு பின்னர் அதிர்ஷ்டவசமாக தலைமையை நிரப்பிய இரா.சம்பந்தனிடம், அவ்வாறான ஆளுமைப் பண்போ, அரசியல் துணிவோ இருக்கவில்லை. ஆனால், அமிர்தலிங்கம் இருந்த எதிர்கட்சித் தலைவர் கதிரையில் தானும் இருக்கவேண்டும் என்னும் ஆசை மட்டும் இருந்தது. அந்த ஆசைக்காக கொழும்புடன் சமரசம் செய்யவும் சம்பந்தன் தயங்கவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் எவ்வாறான தலைவர்கள் தேவை என்னும் கேள்வி எழுகின்றது? அதற்கான பதில் மிகவும் சுலபமானது – அதாவது, எவரும் தன்னை தலைவர் என்று சொல்லிக் கொள்ளலாம் – ஆனால் ஒருவரது தலைமைத்துவ ஆளுமை என்பது, அவரது தீர்மானங்களில்தான் தங்கியிருக்கின்றது. ஒருவர் நெருக்கடியான காலகட்டங்களை எவ்வாறு துணிகரமாகக் கையாளுகின்றார், முடிவுகளை எடுக்கின்றார் என்பதைப் பொறுத்தே அவரது தலைமைத்துவத்தை மக்கள் அறியலாம்.

2009இற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் அரங்கில் அவ்வாறான ஆளுமையை தமிழ் மக்கள் காணவில்லை. அவ்வாறானதொரு தலைமைத்துவ பண்பு சம்பந்தனிடமோ அல்லது அவருடன் இருந்தவர்களுக்கோ இருந்திருந்தால், 2015 ஆட்சி மாற்றத்தை தமிழ் மக்களின் நலனுக்காக உச்சளவில் பயன்படுத்தியிருக்க முடியும். அரசியலமைப்பில் இருப்பவற்றை உச்சளவில் பயன்படுத்துவதுடன் – ஏற்கனவே பறிக்கப்பட்ட அதிகாரங்களிலும் சிலவற்றை மீளப் பெற்றிருக்கலாம் ஆனால் அது சாத்தியப்படவில்லை – காரணம் தலைமைத்துவ வறுமையாகும். தங்களின் தவறுகளுக்காக எவருமே பொறுப்பேற்கவும் இல்லை. ஒரு நல்ல தலைமை தனது தவறுகளுக்கு பொறுப்பேற்று, தனது பொறுப்பை, மற்றவர்களிடம் கையளிக்க எப்போதுமே தயாராக இருக்கும், அதற்கான ஆற்றலை வெளிப்படுத்தும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இலங்கை தமிழரசு கட்சியினர், அவர்களது புதிய தலைமையை, இன்று தெரிவு செய்யவுள்ளனர். இந்த வரலாற்று புரிதல் எந்தளவு கட்சிக்குள் இருந்தது என்பதை வரலாறு பதிவு செய்யும்.

# சகல அபிவிருத்தித் திட்டங்களும் பெப்ரவரி மாதம் முதல் ஆரம்பம்!

*கொழும்பு, ஜன. 21*

இலங்கையின் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் பெப்ரவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வீதி அபிவிருத்திக்காக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவராக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 150 மில்லியன் ரூபாவும் சிறிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 50 மில்லியன் ரூபாவும் கிராமிய அலுவல்கள் அமைச்சின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான கடன் மறுசீரமைப்பு குறித்து கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் இறுதி ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதன் பின்னர் பெப்ரவரி மாதம் முதல் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

இந்த ஆண்டு வீதிகளை அபிவிருத்தி செய்ய உலக வங்கி கடன் உதவியின் கீழ் 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்டுள்ளன.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் வீதிகளை புனர்நிர்மாணம் செய்ய சவூதி அரேபியாவின் நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் ஆரம்பிக்க தயாராக உள்ளதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# தென்கிழக்கு பல்கலை கல்வி நடவடிக்கைகள் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெறும்

*அம்பாறை, ஜன. 21*

அண்மையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கின் காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டிருந்தன.

அவைகள் மீண்டும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆலோசனைக் குழுவின் தீர்மானத்துக்கு அமைவாக, அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் தற்காலிகமாக நிகழ்நிலை (online) முறைமையில் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 22, 2024 முதல், அனைத்து கல்வி நடவடிக்கைகளும் மறு அறிவித்தல் வரும் வரை சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நிகழ்நிலை மூலம் நடத்த தீர்மானிக்கப்பட்டதாக பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் தெரிவித்தார்.

வெள்ளப்பெருக்கின் காரணமாக ஏற்பட்ட சிதைவுகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்படுவதாகவும் மறுசீரமைப்பு பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான சூழல் மாணவர்களுக்கு சுகாதார ரீதியான பாதிப்புகளையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தலாம் என்ற காரணத்தினாலேயே மேற்படி தீர்மானத்துக்கு வந்ததாகவும் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் குறிப்பிட்டார்.

(அ)

# பெருந்தொகை போதைப்பொருளுடன் தெற்கு கடற்பரப்பில் 2 படகுகள் மீட்பு!

*கொழும்பு, ஜன. 21*

மாத்தறை, தெய்வேந்திர முனை கடற்பரப்பில் பெருந்தொகையான போதைப்பொருட்களுடன் இருபடகுகளை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த இரு படகுகளும் காலி துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படையினரும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகமும் இணைந்தே குறித்த படகுகளுடன் போதைப் பொருள் தொகையை கைப்பற்றியுள்ளன.


இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் ஹெரோயின் ரகத்தை சேர்ந்தது என கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டுள்ளதாக இலங்கை கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கடற்படையினரும் பொலிஸாரும் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# மாலைதீவுக்கு மாற்றாகும் லட்சதீவுகள்?



இந்த மாத தொடக்கத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் லட்சதீவுக்கு பயணம் செய்தபோது, அண்டை நாடான மாலைதீவைச் சேர்ந்த சில பிரமுகர்கள் கூறிய சர்ச்சைக்குரிய கருத்துகளால், இந்திய - மாலைதீவு உறவில் விரிசல் உண்டாகியது. இதற்குப் பின்னர் லட்சதீவுகள் இந்தியா முழுவதும் பேசுபொருளாக மாறியது. இந்தச் சிறிய தீவுக்கூட்டத்தை நோக்கி பெருமளவு சுற்றுலாப் பயணிகளின் பார்வை திடீரென திரும்பியது.

மாலைதீவிற்கு வடக்கே, அரபிக் கடலில் அமைந்துள்ளது லட்சதீவு. இந்திய கூட்டாட்சி நிர்வாகத்தின் ஒரு பகுதியான லட்சதீவுக்கு பயணம் செய்த போது, அங்கு பல வளர்ச்சித் திட்டங்களை அறிவித்தார் மோடி. அதைத் தொடர்ந்து மாலைதீவின் மூன்று துணை அமைச்சர்கள் அவரைப் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டனர், இந்திய சமூக ஊடகங்களில் இது பெரும் எதிர்ப்பலையைத் தூண்டியதுடன், "மாலைதீவுக்கு மாற்று லட்சத்தீவு" என்றும் பலரால் பேசப்பட்டது.

இதனால் செய்திகளில் அதிகம் இடம் பெறாத லட்சதீவுகள் குறித்த "கூகுள்" தேடல்கள் கடந்த வாரம் எப்போதும் இல்லாத அளவுக்கு விண்ணைத் தொட்டது. சில ஆண்டுகளுக்கு முன்பு தனது சர்ச்சைக்குரிய கொள்கைகளால் உள்ளூர் மக்களிடமிருந்து எதிர்ப்பைச் சம்பாதித்த, லட்சதீவின் அரசாங்க நிர்வாகியான பிரபுல் பட்டேல் இந்த மாற்றத்தை வரவேற்றுள்ளார்.

"லட்சத்தீவின் இயற்கை அழகு, சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கான மகத்தான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. மேலும் புதிய தங்கும் விடுதிகளை அமைப்பது உட்படப் பல முயற்சிகளை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது," என்று அவர் பிரிஜ செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்தார்.

டாட்டா குழுமம் 2026ஆம் ஆண்டுக்குள் லட்சதீவுக் கூட்டத்தின் இரண்டு தீவுகளில் இரண்டு 'உலக தரம் வாய்ந்த' சுற்றுலா மையங்களை தொடங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. லட்சதீவு தீவுக் கூட்டத்தில் 36 தீவுகள் உள்ளன. அவற்றில் 10இல் மட்டுமே மக்கள் வசிக்கின்றனர். 32 சதுர கிமீ (12.3 சதுர மைல்கள்) பரப்பளவில் இத்தீவுகள் பரவியுள்ளன.

தற்போது லட்சத்தீவுக்கு விமான சேவையை வழங்கும் ஒரே விமான நிறுவனம் கூடுதல் விமானங்களை இயக்கத் தொடங்கியுள்ளது, மற்றொரு விமான நிறுவனம் விரைவில் சேவையைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

ஆனால் நிபுணர்கள் கூறுகையில், அழகிய கடற்கரைகள், தெளிவான நீல, நீர் மற்றும் பவளப்பாறை தீவுகளுக்குப் புகழ்பெற்ற லட்சதீவின் சிறிய பரப்பளவு மற்றும் பலவீனமான சூழலியல் காரணமாக, மாலைதீவு போன்ற ஒரு பெரிய சுற்றுலாத் தலமாக அதை உருவாக்க முடியாது என்கிறார்கள்.

உள்ளூர்வாசிகளும் பலர், லட்சதீவுக்கு தேவையானது ஒரு முறையான சுற்றுலா வணிகவியல், பெரிய அளவிலான வளர்ச்சித் திட்டங்கள் அல்ல எனக் கருதுகின்றனர். மேலும், இத்தகைய சுற்றுலா எழுச்சி அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றிவிடும் எனவும் எண்ணுகின்றனர். இங்குள்ள மக்களின் முக்கிய தொழில்கள் மீன்பிடித்தல், தென்னை சாகுபடி மற்றும் தென்னை நாரிலிருந்து கயிறு திரித்தல் என்பன. மேலும், சுற்றுலா லட்சதீவில் ஒரு "வளர்ந்து வரும் தொழில்துறை" என்றும் கூறப்படுகிறது.

கூடுதல் விமான சேவை தொடங்கும் வரை, தீவுக்கூட்டத்தை அடைய இரண்டு வழிகள் மட்டுமே உண்டு. அலையன்ஸ் எயர் மூலம் இயக்கப்படும் 72 இருக்கைகள் கொண்ட விமானம், கேரள மாநிலம் கொச்சியில் இருந்து லட்சதீவின் அகட்டி தீவில் உள்ள ஒரே விமான நிலையத்திற்கு தினமும் இயக்கப்படுகிறது. மற்றையது, நான்கு நாட்கள் பயணம் செய்து கப்பல் மூலம் செல்வது. நிர்வாகத்தால் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுகள் மூலம் மட்டுமே லட்சத்தீவுக்குள் நுழைய முடியும்.

பிரதேசத்தின் தற்போதைய சுற்றுலாத் தொழிலின் பெரும்பகுதி உல்லாசக் கப்பல் பயணங்கள் மூலம் இயங்குகிறது. அதாவது, உல்லாசக் கப்பல்களில் இருந்து தீவுகளைக் காண வருபவர்கள், பகலில் சுற்றிப் பார்த்து விட்டு, இரவு ஓய்வு எடுக்க கப்பலுக்குத் திரும்புவார்கள்.

லட்சதீவின் எந்தவொரு வளர்ச்சியும், காலநிலை மாற்றம் குறித்த அச்சத்தையும், மக்களின் வாழ்வாதாரம் குறித்த சிக்கல்களையும் சமநிலைப்படுத்த வேண்டும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

## இந்தவார ராசிபலன் 21.01.2024 - 27.01.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - தை 07
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 09.00 - 10.30 திதி : ஏகாதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்கள் முறியக்கப்படும். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

குழந்தைகளின் சீரான முன்னேற்றம் மனதில் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்கு, அவர்களின் திறமைக்கேற்ப நல்ல பணி கிடைக்கும். புதிய பதவிகள் கிடைத்து, அதற்கேற்ப அந்தஸ்தும் உயரும். தொழில் புரிபவர்களுக்கு அரசு மற்றும் வங்கி மூலம் உதவிகள் கிடைத்து நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்கவேண்டும். பணிபுரியும் பெண்களுக்கு அதிகாரிகள் கெடுபிடி காரணமாக மன உளைச்சல் ஏற்பட்டு வேறு இடத்திற்கு அல்லது பணிக்கு மாற முற்படுவர். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், எடுத்துக் கொண்ட புதிய திட்டங் களில் எதிர்பாராத தாமதங்கள் தடைகள் ஏற்படலாம். உழைப்பு அதிகமாகி அதற்கேற்பப் போதுமான ஊதியம் இருக்காது.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் சிலருக்கு வீண் அலைச்சல்கள் ஏற்படும். அரசுப் பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தை உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். இசை ஆர்வத்தால் சங்கீத சபாகளுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். உங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். புத்திர பாக்கியம் ஏற்படும். உங்களுக்குத் திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். அரசியல் வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். உங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை. புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். தொழில் இலாபம் ஆகிய சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்துல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும் அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. அரசு ஊழியர்களுக்கு அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் வராது. தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெண்களின் அறிவுத்திறன் கூடும்.

# ராமர் கோவில்: ‘இந்து’ என நிரூபிக்க போராடும் எதிர்க்கட்சிகள்:

# இது பா.ஜ.கவின் வெற்றியா?

சாரதா வி

ராமர் கோவில் திறப்பு விழாவை முழுமூச்சுடன் முன்னெடுத்து வருகிறது பாஜக. எதிர்க்கட்சிகள் இந்த விழாவை தவிர்ப்பதாகவும், புறக்கணிப்பதாகவும் அறிவித்துவிட்டாலும் இந்த எதிர்ப்பு இந்துக்களை நோக்கியது அல்ல என்று பிரித்துக் காட்டுவதற்கான நிர்பந்தம் சில கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அயோத்தி ராமர் கோவிலை மையப்படுத்தி, கடந்த சில தசாப்தங்களாக பாஜக தனது அரசியலை மேற் கொண்டு வந்தது. நாடாளுமன்றத் தேர்தலை இன்னும் சில மாதங்களில் எதிர்கொள்ள வேண்டிய சூழலில், ராமர் கோயில் திறப்பு விழா நடைபெறுகிறது. தன்னு டைய அரசியலை எதிர்க்கும் கட்சிகளை, இந்து நம்பிக் கைகளுக்கு எதிரானவர்கள் என்று நிறுத்துவதற்குத் தொடர்ந்து முயல்கிறது பாஜக.

இப்படியான சூழலில், நாங்கள் பாஜகவின் அரசி யலுக்கு எதிராக நிற்கிறோம், இந்துக்களுக்கு எதிராக அல்ல என்று காட்டுவதற்கான நிர்பந்தம் எதிர்க் கட்சி களுக்கு ஏற்பட்டுள்ளது.

“இந்தியா” கூட்டணியில் இருக்கும் அனைத்து கட்சிகளுக்கும் ராமர் கோவில் அழைப்பிதழ் அனுப்பப் பட்டுள்ள நிலையில் இந்த சூழல் பல்வேறு கட்சிகளுக் கும் தர்ம சங்கடத்தையே ஏற்படுத்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சி இந்நிகழ்வு அரசியலாக்கப்பட்டிருப் பதால் அதில் பங்கேற்கவில்லை என்று கூறியுள்ளது. “ஜனவரி 22ஆம் தேதி நிகழ்வு நரேந்திர மோதி அரசியல் நிகழ்வு. ஆர் எஸ் எஸ் மற்றும் பாஜகவை மையப்படுத்தி நடைபெறும் நிகழ்வுக்கு நாங்கள் செல்லவில்லை” என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித் துள்ளார்.

திமுக பொருளாளர் டி ஆர் பாலு விடுத்த அறிக்கை யில், ராமர் கோயில் திறப்பு விழா ஒரு ஆன்மீக விழா வல்ல, அரசியல் விழாவாக நடைபெறுகிறது என்று குறிப்பிட்டிருந்தார்.

இடதுசாரி கட்சிகளான சி.பி.ஐ(எம்) மற்றும் சி.பி.ஐ உள்ளிட்டவை இந்த விழாவை ஏற்கமாட்டோம், மதத்தை அரசியலில் கலக்கக்கூடாது என்று தெரி வித்துவிட்டன.

பிஹாரின் ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் யாதவ், ராமர் கோவில் திறப்பு விழாவுக்கு செல்லவில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட் டார். 1990இல் பாஜக தலைவர் எல் கே அத்வானி, அயோத்தி நோக்கி நடத்திய ரத யாத்திரையை பிஹா ரில் தடுத்து நிறுத்தி, கரசேவைக்கு ஆள் சேர்த்த அத் வானியை கைது செய்தவர் லாலு பிரசாத் யாதவ். இப்போதும் தனது நிலைப்பாட்டை குழப்பமின்றி வெளிப்படுத்தியுள்ளார்.

ராமர் கோயில் திறப்பு விழாவை புறக்கணிப்பதாக கூறினாலும், தங்கள் நிலைப்பாட்டை மக்களிடம் எதிர்க்கட்சிகள் தெளிவுபடுத்த முயல்கின்றனர்.


**பா.ஜ.கவின் ராமர் அரசியலை நிராகரிக்கும் மம்தா பானர்ஜி**

பாஜகவின் அரசியலையும் ராமர் கோவிலையும் கடுமையாக நிராகரிக்கும் திரிணாமுல் காங்கிரஸ், அதே நாளில் மேற்கு வங்கத்தில் மற்றொரு நிகழ்வை நடத்துகி றது. அதில் மேற்கு வங்க முதல்வரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி, ஜனவரி



22ஆம் தேதி கொல்கத்தாவில் உள்ள காளி கோவி லுக்குச் சென்று தனிப்பட்ட முறையில் வழிபட்டு, பின் திரிணாமுல் காங்கிரஸ் சார்பாக நடத்தப்படும் ‘சர்ப தர்மா’ (அனைத்து மத) பேரணியில் பங்கேற்கிறார்.

‘தர்மா ஜர் ஜர், உத்சவ் சோபர்’ (மதம் தனிப்பட்டது, விழா அனைவருக்குமானது) என்று கூறுகிறார் மம்தா. பெரும்பாலான மேற்கு வங்க இந்துக்கள் வணங்கக் கூடிய கடவுளாக காளி உள்ளது.



“கடவுள் ராமரின் சிலையை பிரதிஷ்டை செய்வது நமது வேலை அல்ல. அது மதகுருமார்களின் வேலை. ஒரு அரசியல்வாதியாக மக்களுக்கான கட்டமைப்பு களை மேம்படுத்துவதே என் பணி, நான் அதைச் செய்வேன்,” என்றும் மம்தா தெரிவித்திருந்தார்.

மேற்கு வங்கத்தில் பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான பாஜக இந்த முன்னெடுப்புகளைக் கண்டித் துள்ளது. இந்து உணர்வுகளை மதிக்காத மம்தா பானர் ஜியின் போக்கு இது என்று விமர்சித்ததுடன், பாஜக ஐ.டி பிரிவு தலைவர் அமித் மால்வியா “இது வகுப்பு வாத மோதல்களுக்கு களத்தை உருவாக்கிக் கொடுக்கும் செயல். ஏதாவது அசம்பாவிதம் நடைபெற்றால் அதற்கு அவர் மட்டுமே முழு பொறுப்பாவார்,” என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்கு வங்க பாஜக ராமர் கோவில் விழாவை மாநிலம் முழுவதும் பெரிய திரைகள் அமைத்து நேரலை செய்யத் திட்டமிட்டுள்ளது.




**ஆம் ஆத்மி கட்சியின் சிறப்புக் குழு**

ஆம் ஆத்மி கட்சி ராமர் கோவில் திறப்பு விழா நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை என்று கூறினாலும் “ஒருவருக்கு மட்டுமே அனுமதி என்று அழைப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நான் என் குடும்பத் தினருடன் ராமரை தரிசனம் செய்ய விரும்புகிறேன், எனவே இன்னொரு நாளில் ராமர் கோவிலுக்குச் செல்வேன்,” என்று அக்கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

மேலும் ராமர் கோவில் திறப்பு விழாவுக்கு அடுத்த நாளான ஜனவரி 23ஆம் தேதி, டெல்லியில் உள்ள 70 தொகுதிகளிலும், 2600 இடங்களில் சுந்தரகாண்டம் மற்றும் அனுமன் சலிசா பாடும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய, ஆம் ஆத்மி கட்சியில் சிறப்புக் குழு உருவாக்கப் பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் அயோத்தியில் உள்ள ராமர் கோவிலுக்கு சென்று வழிபட்டு வந்த கெஜ்ரி வால், டெல்லி திரும்பியவுடன், முதல்வர் புனித யாத் திரை திட்டத்தில், அயோத்தி பயணத்தையும் சேர்த்து அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியா கூட்டணியில் உள்ள, தேசியவாத காங்கிரஸ் கட்சி தலைவர் சரத் பவார், ராமர் கோவில் திறப்பு விழாவுக்குச் செல்லவில்லை என்று கூறியுள்ளார்.

“ராமரின் பக்தர்கள் ராமர் கோவிலுக்குச் செல்ல உற்சாகமாக உள்ளனர். அவர்களின் மூலம் இந்நிகழ்வின் மகிழ்ச்சி என்னை வந்தடையும். இந்நிகழ்வுக்குப் பிறகு, ராமரை வழிபடுவது எளிதாக இருக்கும். அப்போது, ராமர் கோவிலும் முழுதாகக் கட்டி முடிக்கப்பட்டி ருக்கும். அப்போது நான் செல்வேன்,” என்று கூறியுள்ளார்.

**பா.ஜ.க. பாணியில் நவீன் பட்நாயக்**

ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவர் நிதிஷ் குமார் ராமர் கோவில் திறப்பு விழாவுக்குச் செல்வாரா இல் லையா எனத் தெளிவுபடுத்தவில்லை.

எந்த அணியிலும் இல்லாத பிஜூ ஜனதா தளம் கட்சி ஒடிசாவில் பூரி ஜகன்நாதர் கோவிலை சுற்றி சுற்று வட்டப் பாதை அமைக்கும் திட்டத்தை கையில் எடுத் துள்ளது. கோயில் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, பக்தர்கள் மட்டுமே வலம் வரக்கூடிய வகை யில், மரங்கள் சூழ, இளைப்பாற வசதிகள் கொண்ட பாதை ரூ.800 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் பாஜகவுக்கு எதிரான அஸ்திரமாக இந்த சுற்றுவட்டப் பாதை திட்டத்தை பிஜூ ஜனதா தள தலைவரும் ஒடிசா முதல்வருமான நவீன் பட்நாயக் பார்க்கிறார்.

கிட்டத்தட்ட பாஜகவின் பாணியிலேயே இந்த



கோவில் விழாவும் திட்டமிடப்பட்டுள்ளது. வீடு வீடாகச் சென்று கைப்பிடி அரிசி மற்றும் பாக்கு சேகரிக் கப்பட்டுள்ளது. பரிக்ரமா ப்ரகல்பா என்ற இந்நிகழ்வு பிஜூ ஜனதா தள கட்சி நிகழ்வாக நடைபெறுவதால், இதில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று பாஜக கூறியுள்ளது.

**துர்கா ஸ்டாலினுக்கு அழைப்பிதழ் வழங்கியதில் அரசியலா?**

தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில் பாஜகவின் அரசியலை எதிர்ப்பதில் திமுக தயக்கம் காட்டவில்லை. அதேநேரம் ராமர் கோவிலுக்காக நிதி கொடுப்பதில் தொடங்கி, விழாவிற்கு பக்தர்களை அனுப்புவது வரை சில அமைச்சர்களின் கருத்துகள் சர்ச்சையாகின.

முதலமைச்சரின் மனைவிக்கு அழைப்பிதழ் கொடுக் கப்பட்ட நிகழ்வையும்கூட விமர்சனத்திற்குரிய ஒன் றாகவே பார்க்க வேண்டும் என்கிறார் மூத்த பத்திரி கையாளர் மணி.

“தமிழக முதல்வரின் மனைவிக்கு ராமர் கோவில் திறப்பு விழா அழைப்பிதழ் வழங்கப்பட்டது. அதைப் பெற்றுக் கொள்வதற்கும், அங்கே செல்வதற்கும் அவ



ருக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. ஆனால், அந்தப் புகைப்படத்தை ஏன் வெளியிட வேண்டும்? முதல்வரின் ஒப்புதல் இல்லாமலா அந்தப் புகைப்படம் வெளிவந்தி ருக்கும்? இதன் மூலம் என்ன செய்தி சொல்லப்படு கிறது? இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு அயோத்திக்கு தமிழ்நாட்டு பக்தர்கள் செல்ல ஏற் பாடு செய்யப்படும் என்று கூறுகிறார். ஆட்சி ரீதியாக வும், கட்சி ரீதியாகவும் நாங்கள் இந்துக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்று சொல்லவேண்டிய கட்டா யம் உள்ளது,” என்றார் அவர்.

ஆனால் திமுகவின் டி.கே.எஸ்.இளங்கோவன் அவ்வாறு நிரூபிக்கும் கட்டாயம் எதிர்க்கட்சிகளுக்கு இல்லை என்று மறுக்கிறார்.

“முதல்வர் மனைவிக்கு அழைப்பிதழ் கொடுக்கும் போது எடுத்த புகைப்படத்தை வெளியிட்டது திமுக

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் பொது மன்னிப்பு அதிகாரத்துக்கு கடிவாளம் போடும் நீதித்துறை!

கந்தையா அருந்தவபாலன்

இலங்கையில் நீதித்துறைமீது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, அரசியலமைப்பு ரீதியாகத் தலையீடு செய்வதற்கான வாய்ப்புகளில் ஒன்று குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பை வழங்குதல் ஆகும். நிகழ்வுகளை ஆதாரங்களாகக் கொண்டு கருணை நோக்கில் சட்ட நடைமுறைகளுக்கிணங்க மன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரம் அரசியலமைப்பின் 34 (1) ஆம் உறுப்புரை மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதன்கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டு ஒருவர் மீது விதிக்கப்பட்ட தண்டனையை முழுமையாகவோ அன்றி பகுதியளவிலோ ஜனாதிபதியினால் இல்லாமல் செய்யமுடியும். இதற்கமைய சிறு குற்றங்களில் ஈடுபட்டமைக்காக தண்டனை அனுபவிக்கும் கைதிகளில் பலர் வெசாக், புதுவருடம் போன்ற விசேட நாள்களில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை பெறுவது வழமையானதொன்றாகும். ஆனால் இதற்கு மாறாகப் பதவியிலிருக்கும் ஜனாதிபதிகள் சிலர் தமக்கு வழங்கப்பட்ட இந்த அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி நீதிமன்றங்களினால் விதிக்கப்பட்ட தண்டனையை இல்லாமல் செய்து தமக்கு வேண்டியவர்களை விடுவிக்கும் போது நாட்டின் நீதித்துறை கேள்விக்குள்ளாக்கப்படுவதுடன் அது தொடர்பாக மக்கள் மத்தியில் அதிருப்தியும் தோற்றுவிக்கப்படுகிறது. எனினும் நீதித்துறை சுயாதீனமாக இயங்கும் ஒரு சூழ்நிலை காணப்படுமானால் நீதி மீண்டும் நிலைநாட்டப்படுவதுடன் தமக்கான அதிகாரத்தை நீதித்துறை தக்க வைக்கவும் முடியும் என்பதை பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொலை வழக்கில் மரண தண்டனை பெற்றிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த சில்வாவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் கீழான விடுதலையை உச்ச நீதிமன்றம் வறிதாக்கியமை எடுத்துக் காட்டுகிறது.

உச்ச நீதிமன்றின் இத்தீர்ப்பானது இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் ஜனாதிபதி ஒருவரின் பொது மன்னிப்புக்கு எதிரான முதல் தீர்ப்பாக இருப்பதுடன் இனிவருங் காலங்களில் இது போன்ற வழக்குகளுக்கு அடிப்படையாகவும் அமையப் போகிறது. இது போன்று மிருசுவிலில் எட்டுப்பேரைப் படுகொலை செய்த குற்றத்துக்காக மரண தண்டனை பெற்ற இராணுவ சிப்பாயான சுனில் இரத்னாயகவுக்கு கோட்டாபயவினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்புக்கு எதிரான வழக்கு உச்ச நீதிமன்றில் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. கோட்டாபய மட்டுமன்றி அவருக்கு முன்பிருந்த ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ போன்றோரும் இவ்வதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மைத்திரிபால சிறசேன, நீதிமன்ற அவமதிப்புக்காக 6 வருட சிறைத்தண்டனை பெற்ற பொதுபல சேனா அமைப்பைச் சேரந்த கலகொட ஞானசார தேரருக்கும், றோயல் பார்க் படுகொலை வழக்கில் மரணதண்டனை வழங்கப்பட்ட யூட் அன்ரனி ஜெயமஹாவுக்கும் பொது மன்னிப்பை வழங்கியிருந்தார். இவற்றுக்கெதிராகவும் உச்ச நீதிமன்றில் வழக்குகள் நிலுவையிலுள்ளன. அதேபோல இரட்டைக் கொலைக்காக மரணதண்டனை பெற்றிருந்த முன்னாள் அமைச்சர் ஒருவரின் மனைவியான மேரி யூலியற் மெனிக்கா பெர்னாண்டோ என்பவருக்கு மஹிந்த ராஜபக்ஷ 2005இல் பொது மன்னிப்பை வழங்கியிருந்தார்.

உலகில் ஏனைய பல நாடுகளில் இருப்பதைப் போலவே இலங்கையிலும் பொது மன்னிப்பை வழங்குவதற்கான அதிகாரம்



ஜனாதிபதிக்கு அரசியலமைப்பினூடாக வழங்கப்பட்டிருந்தாலும் அதனை முறைகேடாகக் கையாள்வதைத் தடுப்பதற்கான சில வரையறைகளும் அதே அரசியலமைப்பில் வகுக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பில் பொது மன்னிப்புக்கான அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் உறுப்புரை 34(1) இல் மரணதண்டனைக்கான மன்னிப்புக்கு நடைமுறைக் காப்பு வாசகங்களாக பின்வரும் விடயங்கள் உள்ளன.

- குறித்த வழக்கை விசாரித்து குற்றவாளிக்கு மரணை தண்டனை வழங்கிய நீதிபதியிடமிருந்து அறிக்கையொன்றை ஜனாதிபதி முதலில் பெற்று அதனைச் சட்டமா அதிபருக்கு அனுப்புதல் வேண்டும்.
- அவ்வறிக்கையைப் பெற்ற சட்டம் அதிபர் அது தொடர்பான தனது ஆலோசனைகளுடன் அதனை நீதியமைச்சருக்கு அனுப்ப வேண்டும்.
- அவ்வறிக்கையைப் பெற்ற நீதியமைச்சர் தனது விதப்புரையுடன் அதனை மீண்டும் ஜனாதிக்கு அனுப்ப வேண்டும்.

இந்த மூன்று தரப்புகளின் கருத்துகளை அடிப்படையாக்க் கொண்டே ஜனாதிபதி பொது மன்னிப்புத் தொடர்பான தனது தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்பதே அரசியலமைப்பின் எதிர்பார்ப்பு. இந்த நடைமுறைகளை ஜனாதிபதி பின்பற்றும் அதேவேளை ஜனாதிபதி உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகள் விருப்பு வெறுப்பின்றி செயற்படும் போது வழங்கப்படும் பொது மன்னிப்பு கேள்விக்குள்ளாகும் வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கும். மாறாக ஜனாதிபதி ஒருவர் நடைமுறைகளைப் புறந்தள்ளி எதேச்சதிகாரமாக முடிவெடுக்கும் போதும், ஏனைய தரப்புகளின் மீதான அழுத்தங்கள் அல்லது அத்தரப்புகளிடம் அகவயத்தன்மைகள் காணப்படும் போதும் குறித்த தீர்மானம் நீதியாக இருக்குமென எதிர்பார்க்க முடியாது. இந்நிலைமையில் அவ்விடயத்தில் நீதிமன்றம் தலையிடுவது அவசியமாகிறது.

மேற்குறிப்பிட்ட விடயங்களே துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றில் தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கின் தீர்ப்புக்கு அடிப்படையாக அமைந்தன. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவை கொலைசெய்த குற்றத்துக்காக துமிந்த உட்பட இன்னும் நான்கு பேருக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் 2016 இல் மரணதண்டனை விதித்திருந்தது. இதனை மேன்முறையீட்டின்போது ஐந்து நீதியரசர்கள் கொண்ட உச்ச நீதிமன்றமும் உறுதி செய்திருந்தது. ஆனால் கோத்தாபய பதவிக்கு வந்தபின் துமிந்தவின் விடயம் ஒரு அரசியல் பழிவாங்கலா என ஆராய்வதற்காக ஆணைக்குழு ஒன்றை உள்நோக்குடன் நியமித்து அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் சட்ட நடைமுறைகள் எதனையும் பின்பற்றாது பொது மன்னிப்பை வழங்கியது மட்டுமன்றி துமிந்தவுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் பதவியையும் வழங்கியிருந்தார். இதனை எதிர்த்து பாரத லக்ஷ்மனின் மனைவி சுமன, அவரது மகள் ஹிருணிகா, முன்னாள் இலங்கை மனித உரிமை ஆணையாளர் கஷாலி ஹூசேன் ஆகிய மூவரால் உச்ச நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தொடுக்கப்பட்டது. இவ்வழக்கில் முறைப்பாட்டாளர் சார்பாக முதன்மைச் சட்டத்தரணியாக சுமந்திரன் தோற்றி வாதங்களை முன்வைத்திருந்தார். நீதியரசர் பிரீதி பதுமன் சூர சேனாவை தலைவராகக் கொண்ட மூவர டங்கிய உச்ச நீதிமன்று ஒருமனதாக குறித்த பொது மன்னிப்பு செல்லுபடியற்றதென தீர்ப்பு வழங்கியுள்ளது. மன்றின் தீர்ப்பின் போது தலைமை நீதிபதி "முன்னாள் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட மன்னிப்பை உறுதி செய்வதற்கு எவ்வித சட்ட அடிப்படையோ அல்லது நிகழ்வுச் சான்று அடிப்படையோ இருப்பதாக எனக்குத் தென்படவில்லை. அது தன்னிச்சையானதும் நியாயப் படுத்த முடியாததாகவும் உள்ளது" எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு நாட்டில் சட்ட ஆட்சி நிலவுவதற்கும் ஜனநாயக உரிமைகள் பேணப்படுவதற்கும் வலுவேறாக்கக் கொள்கை பின்பற்றப்படுதல் மிக அவசியமாகும். அதாவது ஒரு நாட்டின் சட்டவாக்க அதிகாரம், நிறைவேற்றதிகாரம், நீதியதிகாரம் என்பன ஒன்றிலிருந்து ஒன்று வேறாக்கப்பட்டிருப்பதுடன் ஒன்றுக்கொன்று துணையாகவும் இருப்பது அவசியமாகும். இதனால்தான் இவை ஒன்றையொன்று மேவாது இருப்பதுடன் ஒன்றையொன்று கட்டுப்படுத்தி அவற்றிற்கிடையில் சமநிலை பேணப்படும் வகையில் நாடுகளின் அரசியலமைப்புகள் உருவாக்கப்பட்டுள் ளன. இத்தன்மை இலங்கையின் அரசியலமைப்பிலும் காணப்படுகிறது. எனினும் இலங்கையில் பல சந்தர்ப்பங்களில் நிறைவேற்றுத்துறையானது அரசியலமைப்பைப் புறந்தள்ளி அல்லது அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி சட்டவாக்கத்துறை, நீதித்துறை என்பவற்றின் அதிகாரங்களின் மீது ஆதிக்கம் செலுத்தும் போக்கு காணப் பட்டு வருகிறது. ராஜபக்ஷ சகோதரர் களின் ஆட்சிக் காலத்தில் இப்போக்கு அதிகளவில் காணப்பட்டதுடன் அவை அதிக விமர்சனங்களுககும் உள்ளாகின. இலங்கையில் பதவியிலிருக்கின்ற ஜனாதிபதி ஒருவருக்கு வழக்குகளிலிருந் தான விடுபாட்டுரிமை அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ளது. அதனை அரசியலமைப்பின் உறுப்புரை 35(1) பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"எவரேனும் ஆள் ஜனாதிபதி என்ற பதவியை வகிக்கின்றபோது அவரது பதவி முறையில் அல்லது தனிப்பட்ட முறையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட எவ்விடயம் தொடர்பிலும் அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எதுவும் தொடுக்கப்படுதல் அல்லது தொடர்ந்து நடத்தப்படுதல் ஆகாது"

நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் மேற்கொள்ளும் நாட்டின் நலன் கருதிய செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படக் கூடாது என்ற தேவைக்கானதாக இவ்வாறான சட்டப் பாதுகாப்பு, அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு வழங்கப்படும்போது அதனைத் தவறாகப் பயன்படுத்தும் நிலையும் ஏற்பட்டுவிடுகிறது. அதன்காரணமாக இவ்வாறான நடவடிக்கைகள்மீது கட்டுப்பாட்டையும் சமநிலையையும் ஏற்படுத்தும் நோக்கில் ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 19ஆம் திருத்தத்தில் தடுப்பு வாசகம் இணைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஜனாதிபதியினால் முறைகேடாக மேற்கொள்ளப்படும் பொதுமன்னிப்பு போன்ற செயற்பாடுகளை அரசியலமைப்பின் உறுப்புரை 126 மூலம் உச்ச நீதிமன்றில் சவாலுக்குட்படுத்துவதற்கான வாய்ப்பு நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகத்தான் துமிந்தவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பைச் சவாலுக்கு உட்படுத்த முடிந்தது.

நாட்டின் முக்கிய துறைகளுக்கிடையில் அதிகாரச் சமநிலையைப் பேணுவதற்கும் குடிமக்களின் ஜனநாயக உரிமைகளைப் பேணுவதற்குமான வரப்பிரசாதமாக அரசியலமைப்பின் உறுப்புரை 126 அமைந்துள்ளது. அரசியலமைப்பினால் உத்தரவாதப்படுத்துள்ள ஒருவரின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது உச்ச நீதிமன்றத்தினூடாக அதற்கான நிவாரணத்தை பெறுவதற்கு இவ்வுறுப்புரையின் மூலம் அவருக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை வாசகங்கள் பரந்தளவில் வியாக்கியானப் படுத்தப்படக்கூடியவை. ஏனெனில் அரசின் எந்தவொரு நடவடிக்கையும் மக்களின் அடிப்படை உரிமைகளுடன் ஏதோவொரு வகையில் தொடர்புபட்டிருக்கும். அண்மையில் உச்ச நீதிமன்றம் ராஜபக்ஷ சகோதரர்களைப் 'பொருளாதாரக் குற்றவாளிகள்' எனப் பிரகடனப்படுத்தியமையும் இதனடிப்படையில்தான். இதன் மூலம் அரச தலைவர்களின் தவறான நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற் கான வாய்ப்பு நீதித்துறைக்குக் கிடைக்கிறது.

அரச தலைவரால் வழங்கப்படும் பொது மன்னிப்பை நீதித்துறை மீளாய்வு செய்வதற்கான ஏற்பாடுகள் அனைத்து ஜனநாயக நாடுகளிலும் காணப்படுகின்றன. இலங்கைக்கு பாராளுமன்ற ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய இங்கிலாந்தில் அரசியினால் வழங்கப்படும் பொது மன்னிப்பை மீளாய்வு செய்வதற்கான வாய்ப்பு நீதித்துறைக்கு உண்டு. அதேபோல இவ்வாறு மீளாய்வு செய்வதற்கான சட்டவலு தனக்குண்டு என்பதை எமது அண்டை நாடான இந்தியாவின் உச்ச நீதிமன்றம் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையில் துமிந்தவுக்கான பொதுமன்னிப்பு வழக்கு எவ்வாறு ஒரு திருப்பு முனையாக அமைகிறதோ அதேபோல இந்தியாவில் ஆந்திரப் பிரதேச மாநில அரசுக்கு எதிரான இதுபோன்ற வழக்கு ஒன்று (Epuru Suthakar and another V Government of Andhrapradesh and others) திருப்பு முனையாக அமைந்தது. பில்கீஸ் பானு என்ற பெண்ணை கூட்டு வன்புணர்வு செய்ததுடன் அவரது குடும்ப உறுப்பினர் ஏழு பேரைக் கொலை செய்த குற்றவாளிகளுக்கு குஜராத் முதலமைச்சர் அண்மையில் வழங்கிய மன்னிப்புக்கு எதிரான வழக்கில் (Bilkis Bano V Gujrat High Court) அதனைக் கேள்விக்குட்படுத்தி செல்லுபடியாக்கியதன் மூலம் இந்திய உச்ச நீதிமன்றம் அதனை மீண்டும் ஒருமுறை உறுதி செய்துள்ளது.

கோதாபயவின் மன்னிப்புக்கு எதிரான இலங்கை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரமாகச் செயற்பாட்டைப் பிரதிபலிப்பதாகக் கொள்ள முடியும். நிலுவையிலுள்ள இதுபோன்ற வழக்குகளின் தீர்ப்புகள் இதனை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பை நாட்டு மக்களுக்கு வழங்கும். ராஜபக்ஷ சகோதரர்கள் ஆட்சியிலிருந்தால் இவ்வாறான தீர்ப்புகள் வருமா என்பது கேள்விக் குறியே. நாட்டின் சட்ட ஆட்சியையும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்துவதற்கு நீதித்துறை இதுபோலச் சுதந்திரமாகச் செயற்படுவது அவசியம்.

# இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் நான்கு வகை வேட்பாளர்கள்! ரணில் தேசிய வேட்பாளராம்!!

பனங்காட்டான்







1977ம் ஆண்டில் தெரிவான நாடாளுமன்றத்தை 1989 வரை தொடர்வதற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி வெற்றி பெற்றார்.

அன்றைய நாடாளுமன்றத்தில் அவருக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை இருந்ததால் அதனை இலகுவாக அவரால் நிறைவேற்ற முடிந்தது. அவ்வாறான அரசியல் பலம் இன்றைய ஜனாதிபதி ரணிலுக்கு இல்லை. எனவே தேவையற்ற விசப்பரீட்சை ஒன்றில் இறங்க அவர் விரும்பமாட்டார்.

இருப்பினும் ஏதோ ஒரு காரணத்தையொட்டி எதிர்க்கட்சிகள் சர்வஜன வாக்கெடுப்பொன்றை ரணில் நடத்த இருப்பதாக பொதுவெளியில் பரப்புரை செய்து வருகின்றனர். இதனை ஐக்கிய தேசிய கட்சியின் உயர்பீடம் அண்மையில் நிராகரித்ததுடன், ரணிலை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கோரியும் உள்ளது.

கட்சியின் அதிகாரபூர்வ தகவல்களின்படி ரணில் இன்னமும் முறைப்படியாக அதற்கு பதிலளிக்கவில்லை என்று தெரிவிக்கபட்டுள்ளது. ஆனால் அவர் சுவிட்சர்லாந்துக்கு புறப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

புது வருடம் பிறந்த முதல் வாரத்தில் தமது தேர்தல் பரப்புரையை வடக்கிலிருந்து அவர் ஆரம்பித்திருந்தார். அந்த நான்கு நாட்களும் அவர் அளித்த உறுதிமொழிகளை ஒன்றாகக் கோர்த்துப் பார்த்தால் அதுவே தமிழருக்கான அவரது தேர்தல் விஞ்ஞாபனம் என்பது தெரியவரும்.

கடந்த ஒன்றரை வருடங்களாக ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்தவாறு தமிழர் பிரச்சனைத் தீர்வு தொடர்பாக அவர் அளித்த வாக்குறுதிகளில் எதனையுமே இதுவரை நிறைவேற்றவில்லை. தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தனின் பாணியில் வருடம் முடிவுக்கு முன்னர், சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு என்று கூறி வந்தாரே தவிர செயற்பாட்டில் எல்லாமே பூச்சியம்தான்.

எனவே வடக்கில் நின்றபோது தெரிவித்தபோது எதனையும் ரணில் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஜனாதிபதித் தேர்தலில் தம்மை எதிர்த்து போட்டியிடுபவர்கள் தமிழர் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குக் கூற வேண்டிய எதனையும் விட்டு வைக்கக் கூடாது என்ற போக்கில் வடக்கில் இவரது உறுதிமொழிகள் இடம்பெற்றன.

ஊகங்களின் அடிப்படையில் எவ்வகையான அனுமானங்கள் வெளியிடப்பட்டு வந்தாலும் ஜனாதிபதித் தேர்தலை இவ்வருட அக்டோபர் மாதத்துக்கு முன்னர் நடத்த வேண்டியது தவிர்க்க முடியாதது. தொடரும் பல கருத்துக் கணிப்புகள் ஜே.வி.பி. வேட்பாளர் அனுர குமார திசநாயக்கவுக்கு தெற்கில் ஆதரவு அமோகமாகி வருவதாக சுட்டுகின்றன. பொதுவாக கருத்துக் கணிப்புகள் எப்போதும் யார் அதனை நடத்துகின்றனர் என்பதைப் பொறுத்தே அதன் முடிவு அமைவதாக இருக்கும். அதனால் ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தளவில் பெரும்பாலான கணிப்புகளும் ஜே.வி.பி. வேட்பாளருக்கு ஆதரவு அதிகரிக்கிறது என்று கூறுவதால் அதனை புறக்கணிக்க முடியாது.

ஆளும் தரப்பிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தரப்பில் சஜித் பிரேமதாசவும் இத்தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் வாக்குகள் பிளவுபடும்போது ஜே.வி.பி.க்கான ஆதரவு அதன் வெற்றிக்கு வழிவகுக்குமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இந்த நிலைமையை புரிந்துகொண்டமையினாலேயே தமிழர் வாக்குகளை எவ்வகையிலாவது கொள்வனவு செய்ய வேண்டுமென்ற நோக்குடன் ரணில் திட்டமிட்டு தனது பரப்புரையை வடக்கிலிருந்து ஆரம்பித்தார்.

மகிந்த தலைமையிலான பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து தனிக்குழுவாக இயங்கும் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் டிலான் பெரேரா, நாலக கொடகேவா ஆகியோர் சஜித் அணியில் இணையலாமென எதிர்பார்க்கப்படும் நிலையில், இதனால் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து தம்மைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் பெரமுனவுக்கு ஏற்பட்டுள்ளது.

பெரமுனவின் தலைவர் மகிந்த தங்களின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை இன்னமும் அறிவிக்கவில்லை. அல்லது தங்கள் ஆதரவு யாருக்கு எனவும் தெரிவிக்கவில்லை. கோடீஸ்வர வர்த்தகரான தம்மிக்க பெரேரா தாமே பெரமுனவின் வேட்பாளர் என்பது போன்று பரப்புரையில் இறங்கியுள்ளார். மகிந்தவின் நெருங்கிய நண்பரான இவர் பெரமுனவின் அரசில் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் உட்பட பல பதவிகளில் அமர்த்தப்பட்டவர். 2022ல் தேசிய பட்டியலூடாக பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான இவர் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சராகவும் சில காலம் பதவி வகித்தவர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளரா அல்லது பொதுஜன பெரமுன வேட்பாளரா என்ற கேள்வி பல காலமாக எழுப்பப்பட்டு வருகிறது. இதற்கான பதிலை அவர் ஒருபோதும் தெரிவிக்கவில்லை. பெரமுனவின் பக்கபலத்துடனேயே ரணில் களமிறங்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை காணப்படுகிறது.

எக்காரணம் கொண்டும் ரணில் தவிர்ந்த இன்னொருவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடாது என்பதில் மகிந்த தரப்பு கரிசனையாக உள்ளது. ரணிலை இன்னொரு தடவை ஜனாதிபதியாக்கி ஆட்சியை தங்கள் கட்டுக்குள் வைத்திருந்தால், அதன் பின்னர் வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் மகன் நாமலுக்கு முடிசூட்டலாமென்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து வருபவர் மகிந்த.

இவ்வாறான பின்னணியில், சஜித்துடன் ரணில் இணைந்து விடக்கூடாதென்பதில் பெரமுனவினர் மிகுந்த அக்கறையுடன் இருக்கின்றனர். இவர்களுள் அதீத அக்கறை கொண்டவர் எதிர்கால ஜனாதிபதியாகக் கனவு காணும் நாமல் ராஜபக்ச.

இதனை இலக்காகக் கொண்டே மொட்டு (பெரமுனவின் சின்னம்) வேட்பாளராக ரணிலும் களமிறங்கலாம் என்று நாமல் அறிவித்துள்ளார். ரணிலை சஜித் சேர்த்துவிடக்கூடாது என்பதைக் குறியாகக் கொண்ட முன்னறிவிப்பு இது.

நாமலின் இந்த அறிவிப்புக்கு இன்னொரு காரணமும் உண்டு. பெரமுனவின் எம்.பியான நிமால் லான்ஸ தலைமையில் சுமார் இரண்டு டசின் பெரமுன எம்.பிக்கள் ஒரு கூட்டாக இணைந்து ரணிலுக்கு ஆதரவாக மாறிவரும் நிலையில், ரணிலுக்கு எதிராக பெரமுன ஒருவரை போட்டியில் நிறுத்தி ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகொள்ள முடியாது என்ற யதார்த்தத்தை நாமல் நன்கு புரிந்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது பற்றி ரணில் இன்னமும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லையாயினும் அவரது ஐக்கிய தேசிய கட்சி இதனை அறிவித்துவிட்டது. தமது தேர்தல் பணிகள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டன என்று ரணிலும் நாடாளுமன்ற வளாகத்தில் சில எம்.பிக்களிடம் நேரடியாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பான சில விபரங்களை கொழும்பு சன்டே ரைம்ஸ் பத்திரிகை கடந்த வாரம் வெளியிட்டது. தமக்கு நெருக்கமான ஒரு குழுவினரை ரணில் தனிமையில் சந்தித்து தேர்தல் பணிகளுக்கான வழித்தடத்தை காட்டியுள்ளார். இவரது மைத்துனரான (மாமன் மகன்) றுவான் விஜேவர்த்தன (இவரே ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர்), ஹரின் பெர்னான்டோ, ரவி கருணநாயக்க, மனுஷ நாணயக்கார ஆகியோர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க வெளிநாடு சென்றிருந்ததால் பங்கேற்கவில்லை.

அடுத்து இன்னொரு குழுவினரையும் சந்தித்து தேர்தல் பணிகளை விளக்கியுள்ளார். மேலதிகமாக நவின் திசநாயக்க, அகில விராஜ் காரியவாசம், வஜிர அபேவர்த்தன ஆகியோர் இதில் பங்கேற்றனர். திட்டமிடல், கூட்டுத் தொடர்பாடல் உட்பட எட்டுப் பணிகளை இவர்கள் மேற்பார்வை செய்ய வேண்டும்.

ரணிலை வெறுமனே ஒரு கட்சியின் வேட்பாளராக நிறுத்தாமல் மகாகூட்டணியின் (Grand Alliance) தேசிய வேட்பாளராக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்போதுள்ள நிலைவரப்படி வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் நான்கு வகையான வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர். பொது வேட்பாளர், தேசிய வேட்பாளர், கட்சி வேட்பாளர், சுயாதீன வேட்பாளர் என இவர்கள் அடையாளம் காணப்படுவர்.

தமிழர் சார்பிலும் ஒருவர் போட்டியிடுவாரென்றால் களம் நிச்சயமாக வித்தியாசமாக மாறும். இதற்காகவாவது, தமிழ்த் தேசிய கட்சிகள் தற்காலிகமாகவேனும் ஒன்றுபடும் சாத்தியமுண்டா?

> **வழமையாக ஒரு தேர்தல் என்றால் போட்டியிடும் கட்சிகளின் தலைவர்கள் அக்கட்சியின் வேட்பாளராகி கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவர். இன்று 'காலநிலை' அப்படியில்லை. தனித்தொரு கட்சி வேட்பாளராக போட்டியிட எவருக்கும் துணிச்சலில்லை, நம்பிக்கையுமில்லை. எல்லோரும் கூட்டுத் தேடி அலைகிறார்கள், பொது வேட்பாளராக நிற்க விரும்புகிறார்கள்.**

அனந்த பாலகிட்ணர்

# அயோத்தி இராமர் கோயில்!

## வால்மீகியை வானுயர வைத்துள்ள பிரதமர் நரேந்திர மோடி !

இராமபிரானின் முடி சூட்டு விழாவின் பட்டாபிஷேகத்துக்காக அவர் அவதரித்த அயோத்தி விழாக்கோலம் பூண்டதை இராமாயணத்தில் அறிந்துள்ளளோம்.

வால்மீகி மகரிஷியால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்டதே இராமாயண இதிகாசமாகும். இராமாயணம் தவிர வில்லிபுத்தாழ்வாரினால் பாடப்பட்டதே மகாபாரதமாகும். இந்த இரு இதிகாசங்களுமே இந்தியர்களது வாழ்வியலோடு இரண்டறக்கலந்துள்ளன. இந்தியாவில் மட்டுமல்ல. தென்னாசிய மற்றும் தென்கிழக்காசிய பிராந்தியங்களில் கூட இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் செல்வாக்கு பெரிதும் வியாபித்துள்ளது. இஸ்லாமிய நாடான இந்தோனேஷியாவில் கூட இராயணத்தின் செல்வாக்கு பெரிதும் செறிந்துள்ளது. இதனை அண்மையில் அங்கு விஜயம் செய்திருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கூட நேரிலே கண்டிருந்தார். தாம் சென்றிறங்கிய இந்தோனேஷியாவின் ஜகார்த்தா விமான நிலையத்திலும் வேறு இடங்களிலும் இராமாயணத்தை முதன்மைப்படுத்திய பெயர்கள் இருந்ததை தாம் கண்டதாக அவர் கூறியிருந்தார்.

இராமயண இதிகாசத்தின் இறுதி அத்தியாயம் இலங்கையிலேயே நிறைவுற்றிருந்தது. எனவே இலங்கையிலேயே இராவணவதம் மற்றும் இராமபிரான் சீதையை மீட்டமை போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றதை இராமயணம் கூறி நிற்கின்றது.

அயோத்தியில் இராம ராஜ்யத்தை அப்பழுக்கற்ற சிறந்த அரசாட்சிக்கு முன்னுதாரணமாகவே இராமயணம் குறிப்பிடுகின்றது. இதன்காரணமாகவே அந்த இதிகாசத்தில் உயர்வான அரசாட்சி மற்றுமல்ல. சிறப்பான வாழ்வியல் பண்புகளும் விழித்துக்கூறப்பட்டுள்ளமையால் இன்றுவரை ஓர் அமர காவியமாக இராமாயணம் நிலை பெற்றிருக்கின்றது.

இதன் வெளிப்பாடாகவே இராம ஜென்ம பூமி என்றழைக்கப்படும் இராமபிரானின் பிறப்பிடமாக இராமாயணத்தில் பாடப்பட்டுள்ள அயோத்தியில் இம்மாதம் 22ஆம் திகதி கட்டடக்கலையம்சத்தின் சிறப்புகளோடு இராமாயண காட்சிகளை சிற்பங்களாகவும், ஓவியங்களாகவும் பிரதிபலிக்கும் பிரமாண்டமான அயோத்தி இராமர் கோயிலின் கும்பாபிஷேகம் இராம பட்டாபிஷேகத்தை நிவைபடுத்தும் வகையில் இடம்பெறவுள்ளது.

கடந்த காலங்களில் அரசியல் மற்றும் மத ரீதியாக சர்ச்சைக்குள்ளாகியிருந்ததே அயோத்தியின் இராமர் கோயிலாகும் . ஆனால் தற்போது அதன் பூர்வீகம் நிலைநாட்டப்பட்டுள்ள நிலையில் ஆயிரம் கோடி இந்திய ரூபாய்களில் அயோத்தி இராமர் கோயில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய வட இந்திய நாகர் கட்டடக்கலை பாணியில் அயோத்தி இராமர் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் அமைப்பானது கிழக்கு மேற்காக 380 அடி நீளமாகும். 250 அடி அகலமாகும். இக்கோயிலின் உயரம் 161 அடியாகும். மூன்று தளங்களைக்கொண்டதாக அயோத்தி கோயில் அமைந்துள்ளது. ஒவ்வொரு தளமும் 20 அடி உயரம் கொண்டதாகும். அத்துடன் இக்கோயிலின் நிர்மாணத்துக்கு எந்தவொரு இடத்திலும் இரும்பு பயன்படுத்தப்படவில்லை.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் அயோத்தி இராமர் கோயில் அமைந்துள்ள நிலப்பரப்பு 70 ஏக்கர்களாகும்.



அயோத்தி இராமர் கோயிலில் 392 தூண்கள் அமைந்துள்ளன. அத்துடன் ஆலயத்தினுள் 45 கதவுகள் இருக்கின்றன. ஐந்து மகா மண்டபங்கள் காணப்படுகின்றன. இதில் ஒன்று இராமரது அரசவையை பிரதிபலிப்பது போல அமைந்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள், வயோதிபர்கள் மேல் தளங்களுக்கு செல்லும் விதத்தில் 'lift' வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கோயில் சுற்றுப்புறம் 732 மீட்டர் நீளம், 14 அடி பாதையுடன் கூடிய சுற்று மதிலை கொண்டுள்ளது. அத்துடன் இராமர் கோயில் அமைவிடத்தை சூழவரவுள்ள பிரதேசத்தின் 70 சதவீதம் பசுமையானதாக இருக்கும் விதத்தில் மரங்களாலும் அழகிய செடிகளினாலும் அழகு படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்தே அயோத்தி நகரம் அற்புதமான இராமாயணக்காட்சிகளை எடுத்தியம்பும் விதத்தில் மின் அலங்காரங்களினால் அமைக்கப்பட்டுள்ளது.

கட்டடக்கலை அற்புதம் என்று வர்ணிக்கப்படுமளவுக்கு அயோத்தி இராமர் கோயிலை அமைப்பதற்கு புராதன தென்னிந்திய கோயிகளின் கட்டடக்கலை நிர்மாணங்களே முன்னுதாரணமாக கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து நிலைத்து நிற்கும் விதத்தில் அரிய வகை கற்கள் அயோத்தி இராமர் கோயில் நிர்மாணத்துக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் முக்கிய அம்சமென்னவெனில் அயோத்தி கோயிலின் நிர்மாணத்துக்கு எவ்வகையிலும் இரும்பு பாவிக்கப்படவில்லை என்பதாகும். ராஜஸ்தான் மாநிலத்தில் காணப்படுகின்ற 'Pink stones' என்று ஆங்கி லத்தில் அழைக்கப் படும் கற்களே பாவிக்கப்பட்டுள்ளன. இக்கற்கள் நீடித்து நிலைக்கக்கூடியவை மட்டுமல்ல. இவற்றில் அழகுறச் சிற்பங்களையும் இலகுவாக செதுக்க முடியும்.

இக்கற்களில் மிக அற்புதமான முறையில் இந்திய சிற்பக் கலைஞர்களினால் இராமபிரானின் வாழ்க்கைச்சரிதத்தைகூறும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள் ளன.

ஐந்து கோயில்கள் இராமர் கோயில் உட்புறத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு கோயில் சூரிய பகவானுக் குரியதாகும். இரண்டாவது கோயில் தேவி பகவதி அம்மையாருக்குரியதாகும். நான்காவது கோயில் விநாயகருக் குரியது. ஐந்தாவது கோயில் சிவனது கோயிலாகும்.

இதுதவிர இராமாயணத்தை இயற்றிய மகரிஷி வால்மீகி, விஷிஷ்டர், அகத்தியர் போன்ற ரிஷிகளுக்கும் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இவை தவிர இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இராமருக்கு உதவிய படகோட்டியான குகன் , இராமரிடமிருந்து சாப விமோசனம் பெற்ற அகல்யா, மற்றும் இராவணன் தனது புஷ்பக விமானத்தில் சீதையைக்கொண்டு சென்ற போது தடுக்க முயன்று பின்னர் உயிர் நீத்த ஜடாயு என்ற கழுகுப்பட்சிக்கும் அயோத்தி இராமர் கோயிலுக்குள் ஒரு சந்நிதானம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இராமர் கோயில் மகா கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் மும்முரமடைந்திருந்த தருணத்தில் அதிசயமான நிகழ்வொன்றும் நிகழ்ந்துள்ளது. இந்த நிகழ்வு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தது. முன்பு அயோத்தியில் நிறையவே கழுகுகள் காணப்பட்டனவாம். ஆனால் காலப்போக்கில் அவை காணாமல் போயிருந்தன. அயோத்தி வாசிகள் அக்கழுகுகள் அழிந்து போயிருக்கலாமென்று கருதியிருந்தனராம். ஆனால் தற்போது அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேகம் நிகழவுள்ள தருணத்தில் முன்பிருந்ததைப்போல ஏராளமான கழுகுகள் அயோத்திக்கு எங்கிருந்தோ வந்துள்ளன. இவற்றின் வருகை மீளவும் இராமபிரான் அயோத்திக்கு வந்துள்ளதைப்போன்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளதாக அங்கிருப்போர் கூறுகின்றனர்.



அயோத்தியில் அமைந்துள்ள விமான நிலையமும் புதுப்பொலிவு பெற்றுள்ளது. இந்த விமான நிலையத்துக்கு அண்மையில் இராமாயணத்தை இயற்றிய மகரிஷி வால்மீகியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இனிவருங்காலங்களில் இந்த விமான நிலையம் வால்மீகி விமான நிலையம் என்றே அழைக்கப்படும். உலகின் பலவேறு நாடுகளில் உள்ள விமான நிலையங்கள் அந்நாடுகளின் பிரபலம் மிக்க தலைவர்களின் பெயர்களைக் கொண்டவையாக இருக்கின்றன. ஆனால் அயோத்தி விமான நிலையம் இராமாயணத்தை இயற்றிய வால்மீகி மகரிஷியின் பெயரால் அழைக்கப்படவுள்ளது. இதன் மூலம் வால்மீகி மகரிஷியையும் அவர் இயற்றிய இராமாயணத்தையும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வானுயர வைத்துள்ளார் என்பதே இந்தியர்களின் அபிப்பிராயமாக இருக்கின்றது.

வால்மீகி விமான நிலையத்தை மெருகூட்டும் வகையில் அவ்விமானத்தின் பிரதான உட்புறச் சுவர்களிலெல்லாம் இராமாயணக்காட்சிகள் அழகுற வரையப்பட்டுள்ளன.

அயோத்தி இராமர் கோயிலில் 25 ஆயிரம் பக்தர்கள் ஒரே நேரத்தில் நெருக்கடிகளின்றி நடமாடும் விதத்தில் விசாலமான உட்புறம் காற்றோட்டம், வெளிச்சம் ஆகியவை காணப்படும் விதத்தில் அமைத்துள்ளது.

'ராம ஜென்ம பூமி ஷேஷாத்ரி' என்ற அமைப்பே அயோத்தி இராமர் கோயில் மகா கும்பாபிஷேக நிகழ்வுகளுக்கு பொறுப்பாக இருக்கின்றது. இந்த அமைப்பு பிரதமர் நரேந்திர மோடி உட்பட மூவாயிரம் விசேட விருந்தினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. அத்துடன் இந்தியாவையும் வேறு நாடுகளையும் சேர்ந்த நாலாயிரம் சமயத்துறவிகள் அயோத்தி இராமர் கோயில் மகா கும்பாபிஷேகத்தில் பங்கேற்கவுள்ளனர். ஐம்பது நாடுகளிலிருந்து பக்தர்கள் அயோத்தி வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்களோடு அயோத்தி ராமர் கோயில் கட்டுமாணப்பணிகளை மேற்கொண்ட பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் அயோத்தி இராமர் கோயிலுக்கு மகா கும்பாபிஷேக தினத்தில் மட்டுமல்ல. அதன்பின்னரும் வருவார்கள் என்பதை கருத்தில் கொண்டு அதி நவீன கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.

இதுதவிர நீராடுவதற்கும் கழிவு நீர் வழிந்தோடுவதற்கும் கச்சிதமான முறையில் வடிகால்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஏராளமானோர் ஒரே தடவையில் அமர்ந்து உணவருந்துவதற்காக விசாலமான அன்னதான மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

அயோத்தி இராமர் கோயிலினுள் வைக்கப்படவுள்ள இராம பிரானின் சிலைகள் அருண் யோகிராஜ் என்ற கர்நாடக மாநில கற்சிற்பக்கலைஞரால் தத்ரூபமான முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

அயோத்தியில் இராமபிரானின் அவதாரத்தை குறிக்கும் விதத்தில் இராமபிரான் பாலனாக இருந்த ததைப்போன்ற சிலையே அயோத்தி இராமர் கோயில் மூலஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இன்று பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டிருக்கலாம். ஆயினும் இந்தியா அடிப்படையில் ஆன்மீகம் ஆழமாக வேரூன்றிய பூமி என்பதை இடித்துரைப்பதாகவே அயோத்தி இராமர் கோயில் வரலாற்றில் இடம்பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அயோத்தி என்பது சமஸ்கிருத சொல்லாகும் இதன் தமிழாக்கம் என்னவெனில் யுத்தத்தை தவிர்ப்போம் என்பதாகும்.

# 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஒழிக்கப்பட்டால்....?

வீரகத்தி தனபாலசிங்கம்



இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு நான்கரை தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நடைமுறையில் இருந்துவருகிறது. இதுவரையில் அது 21 திருத்தங்களைக் கண்டிருக்கிறது.

பதவியில் இருந்த ஜனாதிபதிகள் தங்களின் அரசியல் அதிகார நலன்களுக்கு வசதியான முறையில் கொண்டுவந்த திருத்தங்களே - அடிப்படையில் ஜனநாயக விரோதமான ஏற்பாடுகளைக் கொண்ட திருத்தங்களே அவற்றில் அதிகம் எனலாம்.

ஆனால், ஒப்பீட்டு அடிப்படையில் மற்றைய சகல திருத்தங்களையும் விட ஒரு ஜனநாயகப் பரிமாணத்தைக் கொண்டதாக அமைந்த 13ஆவது திருத்தமே நீண்டகாலமாக கடுமையான அரசியல் சர்ச்சைக்குரியதாக இருந்து வருகிறது.

1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை அடுத்து மாகாண சபைகளை உருவாக்குவதற்காக கொண்டுவரப்பட்டு மூன்றரை தசாப்த காலமாக அரசியலமைப்பின் அங்கமாக இருந்துவரும் 13ஆவது திருத்தம் தொடர்பில் அண்மைக் காலத்தில் மூண்ட சர்ச்சைகள் தொடர்பில் இந்த பத்தியில் ஏற்கெனவே பல தடவைகள் ஆராயப்பட்டிருந்தது..

மீண்டும் அது பற்றி எழுத வேண்டியிருப்பதற்கு காரணம் முன்னாள் அமைச்சரும் இந்தியாவில் தனது பதவிக்காலம் முடிவடைந்து அண்மையில் நாடு திரும்பியிருக்கும் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட கடந்தவாரம் வெளியிட்ட ஒரு அறிக்கையேயாகும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு தங்களைத் தயார்படுத்துவதில் அரசியல் கட்சிகள் தீவிரமாக இறங்கியிருக்கும் நிலையில், எதிர்வரும் தேசிய தேர்தல்களின்போது கட்சிகள் அவற்றின் விஞ்ஞாபனங்களில் மாகாணசபை முறையை ஒழிப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று " பாத்ஃபைண்டர் பவுண்டேசன் " என்ற அமைப்பின் தாபகரான மொரகொட வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்.

மாகாணசபை முறையை ஒழிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை முன்வைப்பது இது முதற்தடவை இல்லை. அண்மைய வருடங்களில் பல தடவைகள் அவரிடம் இருந்து அந்தக் கோரிக்கை வந்தது.

2020 பொதுத்தேர்தலுக்கு முன்னதாகவும் அரசியல் கட்சிகளிடம் அந்த திருத்தத்தை ரத்துச்செய்து மாகாணசபை முறையை இல்லாதொழிப்பது குறித்து நிலைப்பாட்டை விஞ்ஞாபனங்களில் வெளிப்படுத்தவேண்டும் என்று அவர் கேட்டிருந்தார். ஆனால் எந்த கட்சியும் அவரின் கோரிக்கையை கருத்தில் எடுக்கவில்லை.

2021 செப்டெம்பர் முதல் இந்தியாவில் இலங்கையின் உயர்ஸ்தானிகராக பதவியில் இருந்த இரு வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் மாகாண சபை ஒழிப்பு குறித்து மொரகொட பெரிதாக பேசியதாக தெரியவில்லை. ஆனால் இந்தியாவில் இருந்து திரும்பி வந்ததும் தற்போது அது குறித்து தீவிரமாகப்பேசத் தொடங்கியிருக்கிறார்.

அவரது அலுவலகம் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில் மாகாண சபைகளை ஒழித்து அவற்றின் அதிகாரங்களை மீள ஒழுங்கமைக்கப்படும் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்க வேண்டும் என்ற அவரின் முன்னைய நிலைப்பாடு மீண்டும் வலியுறுத் தப்பட்டிருக்கிறது.

"உள்ளூராட்சி சபைகள் குடிமக்களுக்கு நெருக்கமாக செயற்படுவதால் சமுதாய மட்டத்தில் பிரச்சினைகளை கையாளக்கூடிய சிறப்பான நிலையில் அவை இருக்கின்றன. 2 கோடி 20 இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு சிறிய நாட்டுக்கு மாகாணசபை போன்ற இன்னொரு நிருவாக அடுக்கு தேவையற்றது.

"மாகாணசபைகளை ஒழிக்கும் நடவடிக்கைகள் இலங்கையின் ஆட்சி முறையையும் பொருளாதாரத்தையும் மறுசீரமைத்து நவீனமயப்படுத்தும் ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இருக்க வேண்டும். மாகாண சபைகளுக்கு பதிலாக பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களையும் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரையும் உள்ளடக்கிய மாவட்ட மட்ட கட்டமைப்பு ஒன்றின் ஊடாக சிறியதும் செயற்திறன் மிக்கதுமான - மக்கள் ஈடுபாட்டுடன் கூடிய நிருவாகம் ஒன்றை உருவாக்க முடியும்.



> **மிலிந்த மொறகொடவின் வாதங்கள் எவையாக இருந்தாலும் ஜனாதிபதி தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக களமிறங்கக்கூடிய எவரும் 13ஆவது திருத்தம் தொடர்பில் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் எதையும் குறிப்பிடுவதற்கு வாய்ப்பு இல்லை.**

"மாகாண சுயாட்சி மூலமாக இனப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதே 13 வது திருத்தத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. ஆனால் அந்த கட்டமைப்பு பெரும் செலவுபிடிக்கிற ஒன்றாகவும் செயற் திறனற்றதாகவும் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதாகவும் மாறிவிட்டது.

"இன, மத மற்றும் பிராந்திய பல்வகைமை தொடர்பிலான பிரச்சினைகளைக் கையாள்வதற்கு ஒரு செனட் சபையை / மேல்சபையை அமைக்க முடியும்" என்று அறிக்கை கூறுகிறது.

அவர் முன்வைக்கும் யோசனைகள் ஒன்றும் புதியவை அல்ல. மீண்டும் அவர் தீவிர அரசியலுக்கு வருவதற்கு வேறு மார்க்கம் இன்றி அதிகாரப்பரவலாக்கலுக்கு எதிரான நிலைப்பாட்டை பயன்படுத்துவதில் நாட்டம் காட்டுகிறார் போன்று தெரிகிறது.

மொறகொடவின் வாதங்கள் என்னவாக இருந்தாலும், ஜனாதிபதி தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக களமிறங்கக்கூடியவர்கள் எவரும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் 13ஆவது திருத்தம் தொடர்பில் எந்தவொரு நிலைப்பாட்டையும் வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பில்லை.

பிரதான வேட்பாளர்களில் எவரும் முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறுவது சாத்தியமில்லை என்று நம்பப்படும் சூழ்நிலையில் அவர்கள் சிறுபான்மைச் சமூகத்தவர்களின் வாக்குகளை கூடுதல்பட்சம் பெறுவதில் அக்கறை காட்டுவார்கள். அதனால் மொறகொடவின் கோரிக்கைக்கு அவர்கள் செவிசாய்த்து தங்களது வாய்ப்புக்களை சேதப்படுத்தக்கூடிய எந்த நிலைப்பாட்டையும் எடுக்கமாட்டார்கள் என நம்பலாம்.

அதேவேளை, பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தையும் சிறுபான்மைச் சமூகங்களையும் அன்னியப்படுத்தாத ஒரு நிலைப்பாட்டை எடுப்பதில் அவர்கள் கவனம் செலுத்துவார்கள் என்றே எதிர்பார்க்கலாம். ஆனால் அது எந்தளவுக்கு மக்கள் மத்தியில் எடுபடும் என்பது வேறுவிடயம்.

கடந்த வருடம் டிசம்ரில் மூத்த தமிழ்த் தலைவர் இரா. சம்பந்தன் உட்பட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த பொதுத்தேர்தலில் தெரிவுசெய்யப்படும் பாராளுமன்றமே புதிய அரசியலமைப்பு ஒன்றின் ஊடாக அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை முன்னெடுக்கும் என்று கூறினார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அரசியல் தீர்வு முக்கியமான பேசுபொருளாக வெளிக்கிளம்பாமல் இருப்பதை உறுதி செய்துகொள்ளும் தந்திரமான நோக்கத்துடனேயே அவர் அந்த அறிவிப்பைச் செய்தார் என்பதில் சந்தேகமில்லை.

13ஆவது திருத்தத்தை அரசாங்கம் இரண்டு வருடங்களில் படிப்படியாக முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்று கடந்த வருட முற்பகுதியில் அறிவித்த விக்கிரமசிங்க தென்னிலங்கையில் கிளம்பிய எதிர்ப்பையடுத்து அது பற்றி பேசுவதையே கைவிட்டார்.

அரசியலமைப்பில் ஓர் அங்கமாக இருக்கும் 13ஆவது திருத்தத்தை ஒன்றில் நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது அதை இல்லாதொழித்து விடவேண்டும் என்று கூறிய ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்களில் எவராவது புதிய அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை தனிநபர் சட்டமூலமாக சபையில் கொண்டு வந்து அந்த திருத்தத்தை ஒழித்து விடலாம் என்று யோசனையும் சொல்லிக்கொடுத்தார்.

ஆனால் கடும்போக்கு சிங்கள தேசியவாதக் கொள்கைகளைக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் எவரும் கூட அவ்வாறு செய்வதற்கு முன்வரவில்லை.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்டுத்தப் போவதாக கூறப்போய் இறுதியில் அதற்கு எதிராக தென்னிலங்கையில் முன்னரை விடவும் கூடுதல் எதிர்ப்பு அலை கிளம்புவதற்கு விக்கிரமசிங்க வழிவகுத்துவிட்டார் என்று ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது.

பொலிஸ் அதிகாரம் இல்லாமல் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து தீர்மானிக்கும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கே உரியது என்று ஒரு கட்டத்தில் கூறிய ஜனாதிபதி, பிறகு தற்போதைய பாராளுமன்றத்தின் மூலமாக அது விடயத்தில் எதையும் செய்யமுடியாது என்பதை தெரிந்துகொண்டு இப்போது அடுத்த பாராளுமன்றத்திடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்.

இரு வாரங்களுக்கு முன்னர் வடமாகாணத்துக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்ட விக்கிரமசிங்க யாழ்நகரில் துறைசார் நிபுணர்களுடனான சந்திப்பு ஒன்றில் வைத்து 13 வது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை பொருளாதார அபிவிருத்திக்கு மாகாணங்கள் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். அதிகாரப் பரவலாக்கம் என்பது வெறுமனே ஒரு அரசியல் கோட்பாடாக மாத்திரம் அன்றி ஒரு பொருளாதார யதார்த்தமாகவும் இருக்கவேண்டும் என்றும் அங்கு அவர் சொன்னார்.

அந்த அதிகாரங்களை மாகாணங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தும்போது மத்திய அரசாங்கம் தலையீடு செய்யாது என்ற ஜனாதிபதியின் யாழ்நகர் அறிவிப்பை விமல் வீரவன்ச, கெவிந்து குமாரதுங்க போன்ற கடும்போக்கு சிங்கள தேசியவாத அரசியல்வாதிகள் 13 பிளஸை நடைமுறைப்படுத்தும் முயற்சி என்று வியாக்கியானம் செய்யத் தொடங்கியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

அதேவேளை, 13 வது திருத்தம் இனப் பிரச்சினைக்கு உருப்படியான அரசியல் தீர்வுக்கான அடிப்படையே அல்ல என்று இதுகாலவரை கூறிவந்த தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தற்போது இடைக்கால ஏற்பாடாக அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி மாகாணசபைத் தேர்தல்களை நடத்தவேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தன. இதுவே அந்த திருத்தம் தொடர்பில் பெரும்பாலான தமிழ்க்கட்சிகளின் பிந்திய நிலைப்பாடாக இருக்கிறது.

என்றாவது ஒருநாள் இலங்கை அரசாங்கம் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும் செயன்முறையின் ஒரு அங்கமாக தற்போதைய அரசியலமைப்பில் 13 வது திருத்தத்தின் வடிவில் இருக்கும் மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாட்டை இல்லாமல் செய்துவிடக்கூடும் என்ற ஒரு சந்தேகம் நீண்டகாலமாகவே நிவுகி றது.

ஆனால், இந்தியா அதற்கு ஒருபோதும் இடமளிக்காது என்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்னர் வடமாகாணசபை தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக அந்த திருத்தத்தில் கைவைப்பதற்கு மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில முயற்சிகள் இந்தியாவில் அன்று பதவியில் இருந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

# அறிவியல் ஆயிரம்: போத்தல் நீரின் மறுபக்க உண்மைகள்...? நன்மையா?

**பேராசிரியர் சோ. மோகனா**




அன்பின் நண்பர்களே.. நீங்கள் நீர் அருந்த வீட்டிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லாமல், கடைகளில் இருக்கும் போத்தல் நீர்தான் சுத்தமானது, சுகாதாரமானது என்ற எண்ணத்தில் வாங்குபவர்களா? இதோ உங்கள் முன் வரப்போகும் சில அறிவியல் தகவல்களை, கொஞ்சம் யோசனை செய்து பார்த்துவிட்டு, பின்னர் வாங்கிப் பருகுங்கள். இப்போது அம்மாவின் தாய்ப்பாலில் கூட மைக்ரோ பிளாஸ்டிக் இருப்பதாக அறிவியல் கண்டுபிடிப்புகள் உள்ளன. அதே போல கருவறையில் இருக்கும் கருவிலும், அதன் இரத்தத்திலும் மைக்ரோ பிளாஸ்டிக் உள்ளதாக கண்டுபிடித்து உள்ளனர்.

போத்தல் நீரில் நீந்தும் மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் மற்றும் நானோ பிளாஸ்டிக்ஸ் பற்றி அறிவீர்களா? நீங்கள் வாங்கும் ஒரு லிட்டர் தண்ணீரில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ் மற்றும் நானோ பிளாஸ்டிக்ஸ் அழகாக நீந்திக்கொண்டு இருக்கிறது. இந்த உண்மை உங்களுக்குத் தெரியுமா? அமெரிக்க ஆராய்ச்சியாளர்களின் புதிய ஆய்வின்படி, போத்தலில் அடைக்கப்பட்ட நீர் முன்பு நாம் நினைத்ததை விட அதிக அளவில் மைக்ரோ பிளாஸ்டிக்ஸ் மற்றும் சிறிய நானோ பிளாஸ்டிக்களால் நிரப்பப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

**போத்தல் தயாரிப்பில் இணையும் வேதிப்பொருட்கள்**

போத்தல்கள் மற்றும் செயலாக்கம் ஆகிய இரண்டிலும் குழாய் தண்ணீரை விட போத்தல் தண்ணீரில் அதிக மைக்ரோபிளாஸ்டிக் உள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் பிஎன்ஏஎஸ் (PNAS) இல் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வு, பழைய மதிப்பீடுகளை விட 10 முதல் 100 மடங்கு அதிகமான மைக்ரோபிளாஸ்டிக் உள்ளதைக் கண்டுபிடிக்க புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளது.

**பிளாஸ்டிக் துணுக்குகளின் அளவு**

இவை மிக மிகச் சிறியவை. இந்த பிளாஸ்டிக் துண்டுகள், 5 மிமீ-ஐ விட சிறியவை. பொதுவாக அவற்றைக் கையால் கணக்கிடப்படுகின்றன. அவற்றைக் கண்டறிதல் ஒரு கடினமான செயலாகும். நானோ பிளாஸ்டிக்குகள் என்பவை மைக்ரோ பிளாஸ்டிக்குகளை விட மிகவும் சிறியவை. ஒரு மைக்ரோ மீட்டரை விட சிறியதாக இருக்கும் நானோ பிளாஸ்டிக்குகள், மனித இரத்த சிவப்பணுவின் தடிமன் அளவு இருக்கும். அவற்றை கண்காணிப்பது இன்னும் கடினம்.

கடையில் உள்ள போத்தல்களில் மைக்ரோ அன்ட் நானோ பிளாஸ்டிக்குகள் பெட்டிக்கடையின் அடுக்குகளில், அல்லது குளிர் சாதனப்பெட்டியில் வைத்து இருந்த 3 வாட்டர் பிராண்டுகளை சோதித்த பிறகு, ஒரு லிட்டர் போத்தல் தண்ணீரில் சராசரியாக 2,40,000 பிளாஸ்டிக் துண்டுகள் இருப்பதைக் கண்டறிந்தனர். அதன் செறிவுகள் பிராண்டுக்குத் தகுந்தபடி லிட்டருக்கு 1,10,000 துண்டுகள் முதல் லிட்டருக்கு 3,70,000 துண்டுகள் வரை இருந்தன. இந்த துண்டுகளில் பெரும்பாலானவை 90 வீதம் நானோ பிளாஸ்டிக்ஸ், மீதமுள்ள 10 வீதம் மைக்ரோபிளாஸ் டிக்ஸ்.

இந்த போத்தல் நீரை ஆய்வு செய்வது என்பது இதற்கு முன் நமக்கு வெளிப் படாத ஓர் ஆச்சரியமான உலகத்தை, நாம் பார்க்கக்கூடிய ஒருபுதிய சாளரத்தை இது இப்போது திறந்துள்ளது. ஒளி கையொப்பங்களை சேகரிக்க (light signatures) நீர் மூலம் லேசர்களை சுடுவதை உள்ளடக்கிய அவர்களின் புதிய முறை என்பது, 7 பொதுவான பிளாஸ்டிக் வகைகளில் சோதனை செய்தனர். பாலிஸ்டிரீன் பிளாஸ்டிக்கின் ஒரு சிறிய துகள் ஒரு புதிய நுண்ணிய நுட்பத்தால் படம் பிடிக்கப்பட்டுள்ளது. இது சுமார் 200 நானோமீட்டர்கள் அல்லது ஒரு மீட்டரில் 200 பில்லியன்கள் ஆகும்.

போத்தல் தண்ணீரில் மிகவும் பொதுவாக உள்ள பிளாஸ்டிக் வேதிப்பொருள் பாலிமைடு (polyamide) ஆகும். முரண்பாடாக இது நீரை சுத்தப்படுத்துவதற்குப் பதிலாக இது, போத்தல் தண்ணீரைச் சுத்திகரிக்கப் பயன்படும் வடிகட்டிகளில் இருந்து வந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மற்றொரு பொதுவான வகை பிளாஸ்டிக் ஃபாலிஎதிலீன் டெரெப்தாலேட் (polyethylene terephthalate) ஆகும். பெரும்பாலான பாட்டில்கள் இதில் தான் தயாரிக்கப்படுகின்றன.

தண்ணீரில் காணப்பட்ட பெரும்பாலான துண்டுகள் இந்த 7 வகையான பிளாஸ்டிக்கில் எதுவும் இல்லை. உண்மையில், ஆராய்ச்சியாளர்கள் ஒரு லிட்டருக்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமான பாகங்களின் துண்டு செறிவுகளைக் கண்டறிந்தனர், அடையாளம் காணப்பட்ட பிளாஸ்டிக்குகள் இவற்றில் 10 வீதம் மட்டுமே.

நானோ பொருட்கள் இந்த அடையாளம் காணப்படாத துண்டுகள் ஆகும். பிளாஸ்டிக்காக இருந்தாலும், அவை கரிமப் பொருட்களாகவும் இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இந்த சிறிய துகள்களால் ஏற்படும் ஆரோக்கிய விளைவுகளைப் பார்ப்பதோடு, குழாய் நீரில் உள்ள மைக்ரோ மற்றும் நானோ பிளாஸ்டிக்குகளை அடுத்ததாக ஆராய்வதை ஆராய்ச்சியாளர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

நாம் இனி தண்ணீர் பாட்டில்களை கடையில் வாங்குவோமா?

---



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எஸ். சிவராமகிருஸ்ணன், வெள்ளவத்தை, கொழும்பு 6.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி கோட்டாபயவின் ஆட்சியை விட மோசமாக உள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே. அது சரி என்று நீங்களும் நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** உங்களுக்கு அழகாகத் தெரிகின்ற ஒன்று எனக்கு அழகு இல்லாமல் இருக்கும். உங்களுக்கு நல்லவராகத் தெரிகின்ற ஒருவர் எனக்கு கெட்டவராகத் தெரிவார். அதிகம் ஏன் தமிழ் அரசு கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்களில் சிலருக்கு சிறிதரனைப் பிடிக்கின்றது. சிலருக்கு சுமந்திரனைப் பிடிக்கின்றது. இவை எல்லாம் ஒவ்வொருவரும் பார்க்கின்ற கோணத்தைப் பொறுத்தது. கஜேந்திரகுமாரின் அளவீடும் அப்படிப்பட்டதே. அவர் சொல்வது சரி என்று நானும் சொன்னால், அவருக்கே அது பிடிக்குமோ தெரியவில்லை. அவரது பார்வை தனக்கு மட்டும்தான் இருக்கவேண்டும் என்று நினைப்பவரல்லவா அவர்.

**தி. துஷியந்தன், இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** 13 பிளஸ் என்பதை வேறுகோணத்தில் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார் எனவும், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையை இரத்து செய்வதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கிறாரே, அப்படி எதுவும் அண்மைக்காலத்தில் ஜனாதிபதி சொன்னதாகத் தெரியவில்லையே?

**வியுக்தியார்:** அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது இருக்கின்ற மாகாணசபைகள் மூலம் மாகாணத்தின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பமுடியும் என்றும் எனவே வடக்கு மாகாணசபை மூலம் அந்த மாகாணத்தை மேல் மாகாணம் போல மாற்றமுடியும் என்றுதான் அவர் சொல்லியிருந்ததாக அறிந்தோம். அதாவது அவர் சொன்னது தற்போது இருக்கின்ற மாகாணசபைகள் மூலம் என்றுதான். 13ஐ முழுமையாக அமுல்படுத்தினால்தான் அதனைச் செய்யமுடியும் என்று கூட அவர் சொல்லவில்லையே. நன்றாக கவனித்தால், தற்போதைய ஆளுனர் ஆட்சிக்காலத்தில்கூட அதனைச் செய்யலாம் என்றும் தேர்தல்கள் கூட தேவையில்லை என்றும்தான் ஜனாதிபதி மறைமுகமாக கூறிச்சொன்றிருக்கிறார். விமல் சொல்வதையெல்லாம் படிப்பதுதான் நாம் செய்கின்ற தவறு என்றுதான் நான் நினைக்கின்றேன்.

**கந்தசாமி நிதர்சன், தவசிகுளம், கொடிகாமம்.**

**கேள்வி:** பொலிஸ் அதிகாரிகள் சிலர் சரியாக செயற்பட்டிருந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுத்திருக்க முடியும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அட நீங்கள் வேறு. அதைச் சொல்வதற்கு அவர்தான் தேவையா? சரியாக செயற்படாத அதே அதிகாரிகளை வைத்துக்கொண்டுதானே அவர் இப்போதும் பொலிஸ் திணைக்களத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். தாக்குதல் எப்போது? எங்கே நடைபெறவிருக்கின்றது என்பது வரை துல்லியமான தகவல்களை நமது பக்கத்து நாடான இந்தியாவின் உளவுத்துறை சொல்லியும் கூட அதனை தடுக்கமுடியாத அந்த அதிகாரிகளை வைத்துக்கொண்டுதான் அவர் இப்போதும் மக்களைப் பாதுகாத்து வருகிறார்.

**நடராஜா விஸ்வா, கோயில்குளம், வவுனியா.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதிக்கு ஒருமாதத்திற்கு முன்னர் நடத்த வேண்டும் என்றும் அதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு செய்துவருவதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளாரே. அப்படியெனில் தேர்தல் நடப்பது உறுதியாகிவிட்டதா?

**வியுக்தியார்:** இப்படியான அறிவிப்புக்கள் பலவற்றை நாம் உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பு வந்த காலங்களிலும் பார்த்திருக்கிறோம் தானே. ஆனால் இந்த தேர்தலை அப்படி அரசாங்கமும் தட்டிக்கழிக்க முடியாது என்பதால், தேர்தல் நடக்கும் என்றுதான் நானும் நம்புகிறேன்.

**கே. ரமணன், மாமாங்கம், மட்டக்களப்பு.**

**கேள்வி:** "ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலான விடயங்களுக்கு தமது கட்சி ஆதரவு வழங்குமானால் பொதுஜன பெரமுனவில் இருந்து நிச்சயம் வெளியேறுவேன்." என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கூறியிருக்கிறாரே?.

**வியுக்தியார்:** கடந்த தேர்தலில் சிங்கள மக்களை முடிந்தவரை உசுப்பேத்தி, வாக்குகளை பொதுஜனபெரமுன பெற்றபோது, அதில் முதலாளாக இருந்து விருப்பு வாக்குகளைப் பெற்றவர் இவர். அடுத்த தேர்தலில் என்னதான் இனவாதம் பேசினாலும் பொதுஜனபெரமுன ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சில எம்.பி.க்களையே பெறுமா என்று சந்தேகிக்கப்படும்போது. தான் அதில் இருந்தாலும் வெற்றிபெறமுடியாது என்று புரிந்துவிட்டது போலும், அதுதான் அவர் வெளியே வருவதற்கு 'வேலியில் ஓட்டை தேடுகிறார் என்று நினைக்கின்றேன்.

# ஈரான் - பாகிஸ்தான் போர் பதற்றம் :
# இஸ்ரேல் ஆதரவு குழுவை தாக்கிய ஈரான்! பலூச் முகாம்களை தாக்கிய பாகிஸ்தான்!!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், இஸ்லாமாபாத் புதன்கிழமை தெஹ்ரானில் இருந்து தனது தூதரை திரும்ப அழைத்துக்கொண்டு, பாகிஸ்தானுக்கான ஈரான் தூதரை வெளியேற்றியது.

பாகிஸ்தான் தனது வான்வெளியில் அத்துமீறலை கண்டித்து எதிர்வரும் நாட்களில் பாகிஸ்தானுக்கும் ஈரானுக்கும் இடையில் நடைபெறவிருந்த மற்றும் திட்டமிடப்பட்ட அனைத்து உயர்மட்ட பயணங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**பாகிஸ்தானில் ஈரான் தாக்குதல்**

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தை ஒட்டிய எல்லைப் பகுதியில் ஈரான் தாக்குதல் நடத்தியது. அங்கிருந்த இஸ்ரேல் ஆதரவு குழுக்களின் முகாம்களை அழிக்கும் வகையில் தாக்குதல் நடத்தியதாகக் கூறியது.

ஜெய்ஷ் அல் அட்லின் குழுவின் இரண்டு தளங்களை ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் ஈரான் செவ்வாய்க்கிழமை16.01.24 குறிவைத்ததாக தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் எல்லைக்கு அருகே ஈரானிய பாதுகாப்புப் படையினரை குறிவைத்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ஈரானுக்குள் பாகிஸ்தான் தாக்குதல்**

இதற்கு பதிலடி தாக்குதலாக ஈரானுக்குள் உள்ள பலூச் முகாம்கள் மீது பாகிஸ்தான் விமானப்படை வான்வழித் தாக்குதலை மேற்கொண்டது. பாகிஸ்தானில் ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடியாக தற்போது பாகிஸ்தானின் விமானப்படை ஈரான் உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தி உள்ளது.



ஈராக், சிரியா, பாகிஸ்தான் என மூன்று நாடுகள் மீது அடுத்தடுத்து ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. இதன் மூலம் சுன்னி தீவிரவாத அமைப்புகளுக்கு ஓர் எச்சரிக்கையை அழுத்தமாக ஈரான் கொடுக்க விரும்புவதாக சர்வதேச விவகாரங்கள் தொடர்பான வல்லுநர்கள் கருதுகின்றனர்.

ஈரான் தன்னைச் சுற்றியுள்ள பலவீனமான, அரசியல் ரீதியாக ஸ்திரத்தன்மையற்ற நாடுகளில் இருந்து தனது இறையாண்மைக்கு, பாதுகாப்புக்கு எதிராக செயல்படும் அமைப்புகளைத் துவம்சம் செய்ய தயங்காது என்ற செய்தியை ஈரான் வலுவாகக் காட்டும் விதமாகவே மூன்று நாடுகள் மீது அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியுள்ளது என்று இந்த வல்லுநர்கள் கூறுகின்றனர்.

> **பாகிஸ்தானில் இஸ்ரேல் ஆதரவு உளவுக் குழுக்களை ஈரான் முதலில் தாக்கியது. இதற்கு பதிலடியாக ஈரானுக்குள் பலூச் முகாம்கள் மீது பாகிஸ்தான் தாக்குதலை நடாத்தி உள்ளது**

**தற்காப்பு நடவடிக்கை எனும் இந்தியாவின் நிலை**

தற்காப்புக்காக நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளை புரிந்து கொள்வதாக இந்தியா கூறியுள்ளது.

மேற்கு பாகிஸ்தானில் உள்ள தளங்களை ஈரான் தாக்கிய பிறகு, பயங்கரவாதத்திற்கு எதிரான “சமரசமற்ற” நிலைப்பாட்டை இந்தியா கடைப்பிடித்தாலும், தங்கள் தற்காப்புக்காக நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளை புரிந்துகொள்வதாக இந்தியா கூறியுள்ளது.

இந்தியாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால், இது ஈரானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினை. இந்தியாவைப் பொறுத்த வரையில், பயங்கரவாதத்தை பொறுத்துக்கொள்ள முடியாது என்ற சமரசமற்ற நிலைப்பாட்டை நாங்கள் கொண்டுள்ளோம். நாடுகள் தங்கள் தற்காப்புக்காக எடுக்கும் நடவடிக்கைகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம் என்று கூறினார்

**அமைதிக்காக தலையிட முனையும் சீனா**

பாகிஸ்தான் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது சீனாவிற்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது. இது இந்தியாவிற்கு சாதகமாக முடியும் வாய்ப்புகள் உள்ளதாகவும்,உடனே தாக்குதலை நிறுத்த சீனா கோரியுள்ளது.

பாகிஸ்தான் மீது வைக்கப்படும் அழுத்தங்கள் எல்லாம் சீனாவிற்கு ஒரு வகையில் அழுத்தமாகவும், இந்தியாவிற்கு ஆதரவாகவும் மாறும் என்றும், அந்த வகையில் பாகிஸ்தான் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது சீனாவை சமரசம் செய்ய வைத்துள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்றும் கூறியுள்ளது. பாகிஸ்தான் மற்றும் ஈரானுக்கு சீனா சமரச அழைப்பு விடுத்துள்ளது.

இந்த சண்டையை முதலில் நிறுத்துங்கள், இது மிகவும் ஆபத்தானது என்று சீனா தெரிவித்துள்ளது. இதனால் இந்தியா மறைமுகமாக பலனடையுமோ என்று எண்ணப்படும் நிலையில்தான் சீனா இந்த கருத்தை வெளியிட்டு உள்ளது.

**ஜெய்ஷ் அல் அட்லி தள தாக்குதல்**

பாகிஸ்தானில் உள்ள ஜெய்ஷ் அல் அட்லின் இரண்டு தளங்கள் ஈரான் நாட்டு ஏவுகணைகளால் தாக்கப்பட்டு உள்ளன. ஈரானின் உயரடுக்கு ராணுவ குழு மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.




ஏற்கனவே ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அந்த அமைப்பின் இலக்குகளை ஏவு கணைகளால் தாக் கிய ஈரான் தற்போது பாகிஸ்தானில் உள்ள அந்த அமைப்பின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

பாகிஸ்தானுட னான எல்லைப் பகுதியில் ஈரான் பாதுகாப்புப் படையினர் மீது இஸ்ரேல் ஆதரவுள்ள இந்த தீவிர வாத அமைப்பு முன்பு தாக்குதல் நடத்தி யது. அதற்கு பதிலடியாக இப்போது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இரண்டு தளங்கள் ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களால் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்று ஈரானிய அரசு செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால் பாகிஸ்தான் - ஈரான் இடையே போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. ஏற்கனவே பல நாடுகளுக்கு இடையே போர் நடந்து வருகிறது.

**மேற்கு ஆசிய போர் பதற்றம்**

ஹமாஸ் - இஸ்ரேல் போர் மூன்று மாதங்களைக் கடந்து, காசாவில் 25,000-க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். 60,000-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மிகப் பெரிய மனிதாபிமான நெருக்கடியில் காசா சிக்கித் தவிக்கிறது.

யேமன் உள்நாட்டுப் போரில் அந்நாட்டின் பெரும் பகுதியை கைப்பற்றிய ஹவுதிகள் ஈரான் ஆதரவுடன் தாக்குதலில் ஈடுபடுவதாக இஸ்ரேலும், அமெரிக்காவும் குற்றஞ்சாட்டி வருகிறது. செங்கடல் பாதையில் செல்லும் சர்வதேச கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் அழைப்பு விடுத்தும் ஹவுதிகள் அதற்கு செவி சாய்க்கவில்லை.

இதனைத் தொடர்ந்து யேமன் நாட்டின் ஹவுதிகள் தொடர்புடைய இலக்குகள் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

மேற்கு ஆசியாவில் ஆங்காங்கே போர்கள் முளைத்துக் கொண்டிருப்பது பிராந்திய அமைதிக்கு பெரும் பாதகமாக மாறி வருகின்றன.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக மேற்கு ஆசியாவில் தொற்றிய பதற்றம் மெல்ல மெல்ல ஈரானை ஆக்கிரமித்துள்ளது. மேற்கு ஆசிய பதற்றத்தால் தனது உள்நாட்டு, வெளியுறவு பாதுகாப்பு சவால்கள் மீதான அழுத்தம் தர அண்டை நாடுகளைத் தாக்க வேண்டிய நிர்பந்தத்துக்குள் ஈரான் ஆபத்தான நிலைக்கு விழுந்திருக்கிறது என்பதே உண்மையாகும்.



# ராமர் கோயில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல, அவர்கள்தான். இதை வைத்து அரசியல் செய்ய வேண்டும் என நினைப்பது அவர்கள்தான்," என்று விளக்கினார்.



மேலும், "எதிர்க்கட்சிகள் இத்தனை ஆண்டுகளாகச் செய்தது எல்லாமே இந்துகளுக்காகத்தான். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு வழங்கும் மண்டல் கமிஷன் கொண்டு வந்தார். இந்துக்களில் மட்டும்தான் பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் உண்டு. வி பி சிங் இட ஒதுக் கீட்டை அமல் படுத்தினார். திராவிட இயக்கங்கள் பேசியது எல்லாமே பட்டியலினத்தவருக்கும் பிற்படுத் தப்பட்டவர்களுக்கும்தான். இவர்கள் எல்லாரும் இந்துக்கள்தானே. கடவுளை அரசியலுக்காக பயன்படுத்தும் போது, அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அரசியல் தரகராக கடவுளை பாஜக பயன்படுத்துகிறது," என்று காட்டமாக விமர்சித்தார்.

**எதிர்க்கட்சிகளால் இந்துக்களை ஈர்க்க முடியாதா?**

பிரதமரின் செயல்பாட்டில் அரசியல் இல்லை என்று மறுக்கிறார் கேரள பாஜகவை சேர்ந்த ஷோபா சுரேந்திரன். "பிரதமர் மோடி கேரளா வந்த போது ராமர் கோவில் அட்சதயை அனைவருக்கும் கொடுத்தார். இடதுசாரி அரசுக்கு மிக நெருக்கமாக இருக்கும் நடிகர் மம்முட்டிக்கும் கொடுத்தார், அவரும் அதை பெற்றுக் கொண்டார்," என்றார்.

மேலும், "ராமரின் கோவிலை ஒரு புனித தலமாகப் பார்க்க வேண்டும். எப்படி கிறித்தவர்களுக்கு யேசு பிறந்த இடம் புனிதமானதோ, இஸ்லாமியர்களுக்கு மெக்கா, மெதினா புனித தலங்களோ அதுபோல நமது நாட்டின் புனித தலம் அயோத்தி," என்றார்.

பாஜவின் அரசியலுக்கு எதிர்க்கட்சிகள் வினையாற் றும் நிலை ஏற்பட்டுள்ளது என்கிறார் அரசியல் பேராசிரியர் ராமு மணிவண்ணன்.

"பாஜக பேசும் மொழியையே எதிர்க்கட்சிகளையும் பேச வைத்திருப்பது பாஜகவின் வெற்றி. எதிர்க் கட்சிகள் எவ்வளவு முயன்றாலும், அவர்கள் இந்துக்களுக்கு ஆதரவானவர்களாக என்றைக்கும் பார்க்கப்படமாட் டார்கள்.

அவர்களின் முயற்சிகள் பாஜகவின் வாதம் உண்மை யல்ல என்று கூறுவதற்கு மட்டுமே உதவும். தலைவர்கள் அனைவரும் மத நம்பிக்கை கொண்டவர்கள்தான். இந்துக்கள்தான். முலாயம் சிங், மமதா பானர்ஜி, கெஜ்ரிவால் ஆகியோர் பாஜகவினரைவிட மதப் பற்று கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால், மதத்தை அரசியலுக்குள் நுழைக்கும்போது எதிர்க்கட்சிகள் பின்னடைவை எதிர்கொள்கிறார்கள்," என்றார்.

# 13ஆவது அரசியலமைப்பு...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் அரசாங்கத்தின் தலை யீட்டை அடுத்து கைவிடப்பட்டதாகக் கூறப்பட்டது.

தமிழர்களும் சிங்களவர்களும் விரும்பாத ஒரு திருத்தத்தை நடை முறைப் படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கவேண்டிய என்ன தேவை இந்தியாவுக்கு இருக்கப்போகிறது என்ற ஒரு கேள்வி ஒருநாள் எழவே செய்யும்.

தற்போதைய அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாட்டை புதிய அரசியலமைப்பு ஒன்றின் ஊடாக எதிர்கால இலங்கை அரசாங்கம் ஒன்று இல்லாமல் செய்வ தற்கு முயற்சிக்கும் பட்சத்தில் மாறிவரும் புவிசார் அரசியல் நிலைவரங்களின் மத்தியில் அதை தடுப்பதற்கு இந்தியா எந்தளவு அக்கறை காட்டும் என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் தமிழர் பிரச்சினையுடன் தொடர்புடைய பிரச்சினைகளை சம்பந்தப்படுத்துவதை இனிமேலும் கொழும்பு விரும்பவில்லை என்பதை புதுடில்லி நன்கு அறியும். இலங்கையில் தனது நலன்களைப் பாதுகாப்பதற்கு பயன்படுத்தக்கூடிய வலிமை கொண்டதாக தமிழ் அரசியல் சமுதாயம் இனிமேலும் இல்லை என்பதை புதுடில்லி எப்போதோ புரிந்துகொண்டு விட்டது எனலாம்.

இலங்கை இனப்பிரச்சினையில் 1980களில் இந்தியா நேரடியாக தலையீடு செய்தபோது நிலவிய சர்வதேச அரசியல் நிலைவரத்துக்கும் இன்றைய நிலைவரத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருக்கிறது.

ஆனால் தமிழ்க் கட்சிகளுக்கு புதுடில்லியிடம் வேண்டுகோள் விடுப்பதைத் தவிர வேறு வழி தெரியவுமில்லை. இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவுக்கு தற்போது இருக்கும் அக்கறையின் இலட்சணத்தைப் பற்றிய புரிதல் பெரும்பாலான தமிழ்க்கட்சிகளிடம் இருப்பதாகவும் தெரியவில்லை.

இந்தியா தமிழர்களை ஒருபோதும் கைவிடாது என்று அடிக்கடி கூறிக் கொள்வதில் சம்பந்தன் திருப்தியைக் கண்டுகொள்கிறார்.

13ஆவது திருத்தம் ஒன்றே இலங்கை அரசியலமைப்பில் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பிலான ஒரேயொரு ஏற்பாடாக இருக்கிறது. இந்தியாவின் படை பலத்துடன் கூடிய நேரடித் தலையீடு இருந்திருக்காவிட்டால் அது ஒரு போதும் சாத்தியமாகியிருக்காது என்பதை புரிந்துகொள்வதற்கு எவரும் அரசியல் நிபுணராக இருக்க வேண்டியதில்லை.

உள்நாட்டுச் செயன்முறைகள் மூலமாக அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளை வகுப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட கடந்த கால முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெற முடியவில்லை என்ற வரலாற்று அனுபவம் எம் முன்னால் விரிந்து கிடக்கிறது.

என்றாவது ஒரு நாள் 13ஆவது திருத்தத்தை இலங்கை அரசாங்கம் ஒன்று இல்லாமல் செய்தால் உள் நாட்டுச் செய்முறை ஒன்றின் ஊடாக அத்தகைய ஒரு ஏற்பாட்டை மீண்டும் கொண்டுவர முடியுமா?

அந்த திருத்தத்தின் பல்வேறு போதாமைகளுக்கு அப்பால் இந்த கேள்வி குறித்து தமிழ் அரசியல்வாதிகள் ஒரு கணம் சிந்திப்பார்களா? அவர்கள் சிந்திக்காவிட்டாலும் தமிழ் மக்கள் சிந்திக்காமல் இருக்கமுடியாது.

# மரண அறிவித்தல்



தோற்றம்
26.10.1929

மறைவு
18.01.2024

## திருமதி ஈஸ்வரபாதம் வசந்தரூபா

மலேசியாவை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஈஸ்வரபாதம் வசந்தரூபா அவர்கள் கடந்த (18.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற ஈஸ்வரபாதம் அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்ற செல்லையா – பாக்கியலட்சுமி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற ஈஸ்வரபவானி மற்றும் ரூபரஞ்சனி, சரவணபவன் (நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், நிர்வாக இயக்குநர் உதயன் சஞ்சீவி நிறுவனம் ), ஸ்ரீரஞ்சனி (லண்டன்), முகுந்தன் (லண்டன்), ஸ்ரீதரன் (லண்டன்), வசந்தினி (இந்தியா), கீதா கேதீஸ்வரி (லண்டன்), நவநீதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பாலசுப்பிரமணியம், யசோதை, சக்திதாசன் (லண்டன்), விமலாதேவி (லண்டன்), பிரேமினி (லண்டன்), ராஜேந்திரன் (இந்தியா), ஸ்ரீகாந்தா (லண்டன்), சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி ரஞ்சிதம் ராஜரத்தினம் (சிங்கப்பூர்), லீலா ரங்கநாதன் (மலேசியா), காலஞ்சென்ற அமலரதி மகேஸ்வரன் (மலேசியா) மற்றும் காலஞ்சென்ற மதனபூபாலன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு சகோதரியும் ரமணன், இசுரிகா, உமையாள், ஜெயபிரகாஷ், சிந்தியா, சுரேஸ்குமார், அபிராமி, அமர், சித்ரூபி, பிரகதீபன், பிரவீன், வினிதா, வைஷ்ணா, சாம், லக்ஷ்மி, விதுன், ரம்யா, வினோத், பிரஷிகன், சேயோன், விஷ்ணு ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், கேசவா, துருவா, நேத்ரா, டீரன், அக்ஷயன், ஆராதனா, லூஷியஸ், ஐவி, நோஆ ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.01.2024) திங்கட்கிழமை காலை 08.30 மணிக்கு 105, இராஜ வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

105, இராஜவீதி,
கோப்பாய். யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

A-1

## நல்லெண்ண....

பருத்தித்துறையில் ஒரு படகுடன் கைது செய்யப்பட்ட 10 மீனவர்களும் ஊர்காவற்றுறையில் 3 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களும் விடுவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இராமேஸ்வர விஜயத்தை முன்னிட்டு மீனவர்கள் விடுவிப்பு இடம்பெறுவதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சினால் இலங்கையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தமது உறவினர்களை விடுவிக்குமாறு இராமேஸ்வரம் மீனவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததாகவும் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

நாகை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களை சேர்ந்த மீனவர்களே விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பிரித்தானிய....

பிரித்தானிய மற்றும் அமெரிக்கப் படைகள் இணைந்து நடத்தும் இந்த தற்காலிக முகாமில் இரண்டு வருடங்களுக்கும் மேலாக பெருமளவிலான இலங்கைத் தமிழர்கள் தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

புலம்பெயர்ந்தோர் மற்றும் அதிகாரிகளின் கூற்றுப்படி, கனடாவுக்குச் செல்ல முயன்றபோது அவர்கள் பயணித்த படகு பழுதானதை அடுத்து, ஒக்ரோபர் 2021 இல் தமிழர்களின் முதல் குழு டியாகோ கார்சியாவில் தரையிறங்கியது.

இந்த தீவு பல நூறு கிலோ மீற்றர் தனிமையில் இருப்பதுடன், அங்கீகரிக்கப்படாத எந்தப் பார்வையாளர்களும் தீவிற்குள் நுழைவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளனர். இந்த தீவில் 60 புகலிட கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் உறுப்பினர்கள் 2023ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் குறித்த தீவிற்கு சென்றனர். அகதிகள் இந்த தீவிற்குள் நுழைந்த இரண்டு வருடங்களின் பின்னர் முதல்முறையாக அதிகாரிகள் தீவிற்குள் வந்துள்ளனர்.

"டியாகோ கார்சியா ஒரு இராணுவத் தளத்தைக் கொண்ட ஒரு தீவு ஆகும், எந்த குடிமக்களும் அங்கு இல்லை, இந்த குழுவிற்கு நீண்டகால வசிப்பிடத்திற்கு ஏற்ற இடம் அல்ல" என்று ஒரு செய்தித் தொடர்பாளர் அறிக்கையில் தெரிவிதார்.

இந்நிலையில், "சர்வதேச சட்டத்திற்கு இணங்க, சர்வதேச பாதுகாப்பு தேவைப்படுபவர்களுக்கான தீர்வுகளைப் பாதுகாக்கவும் பிரித்தானியாவை தொடர்ந்து கேட்டுக்கொள்கிறோம்." என அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் தீவின் நிலைமைகளை நரகம் என்று விவரித்துள்ளனர், பலர் தற்கொலைக்கு முயன்றதாகக் கூறியுள்ளனர். உண்ணாவிரதப் போராட்டங்களும் நடந்துள்ளன.

"நாங்கள் உயிரற்ற வாழ்க்கையை வாழ்கிறோம். நான் இறந்த மனிதனைப் போல் வாழ்கிறேன்" என்று ஒருவர் கடந்த ஆண்டு பிபிசியிடம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், புலம்பெயர்ந்தோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இங்கிலாந்து சட்டத்தரணிகள் தீவிற்குள் நுழைய முயன்று வருவதாக சட்டத்தரணி டெஸ்லா கிரிகோரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரித்தானியாவில் உள்ள சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஆபிரிக்க நாடு ஒன்றுக்கு நாடு கடத்தும் தீர்மானம் ஒன்றை அந்நாட்டு அரசாங்கம் நிறைவேற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதி....

நடைமுறையில் உள்ள அரசியலமைப்புச் சட்ட நிலைமைக்கு அமைய எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கு இடையில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என கூறப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முடிவடைகின்றது. இதன் பின்னர் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இலங்கை தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட 86 அரசியல் கட்சிகள் நாட்டில் செயற்பட்டு வருகின்றன. (அ)

## பராக்கிரமபாகு....

பிறகு இலங்கையில் செங்கடலுக்கு போர்க்கப்பல்களை அனுப்பிய முதல் அரச தலைவர் தாம் என்று மருதானை லோறன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் போரிட இலங்கை கடற்படையின் கஜபாகு மற்றும் சயூரி ஆகிய இரண்டு கப்பல்களை அனுப்பத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## நிறைவேற்று....

சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை காரணமாக நாடு அழிந்தது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாக ரணில் விக்கிரமசிங்க கூறினால், தான் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவளிப் பேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை முறையை மாற்றிய பின்னர், மேலும் இரண்டு வருடங்கள் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்தாலும் பிரச்னையில்லை எனவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (அ)

## இந்திய....

பிரதமர் உள்ளிட்ட குழு, இந்திய மீனவர்களின் பிரச்னைகள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் உயர்மட்ட அளவில் விவாதித்து இருக்கின்றது.

பேச்சுவார்த்தைகளில், இந்திய மீனவர்களின் வாழ்வாதார நிலையைக் கருத்தில் கொண்டு, மனித நேயத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், எந்தச் சூழ்நிலையிலும் மோதல் போக்கை கடைபிடிக்கக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை உடனான கூட்டுப் பணிக் குழுவின் தொடர் பேச்சுவார்த்தைகளில், கைப்பற்றப்படும் மீன்பிடி படகுகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது அடுத்த கூட்டுப் பணிக் குழுவின் கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது. ஜனவரி 9ஆம் திகதி நிலவரப்படி, 13 இந்திய மீனவர்கள் இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டு உள்ளனர்.

இந்திய அரசின் தொடர் முயற்சியால், 227 இந்திய மீனவர்களையும், 14 மீன்பிடி படகுகளையும் கடந்த 2023 ஆம் ஆண்டில் மீட்டுள்ளோம். மீதமுள்ளவர்களையும் விடுவிக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரும், யாழ்ப்பாணத்தில் உள்ள துணை இந்திய உயர்ஸ்தானிகரக அதிகாரிகளும் சிறைக்காவலில் உள்ள இந்திய மீனவர்களை மீட்பதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்" என்று தெரிவித்துள்ளார். (அ)

# பெரமுனவுக்கு எதிராக இட்டுக்கட்டப்பட்ட பொய்களுக்கு விரைவில் பதிலளிப்போம்!

### கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஜன. 21

மரக்கறிகளின் விலையை குறைப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமது கட்சிக்கு எதிராக இட்டுக்கட்டப்பட்ட பொய்களுக்கு விரைவில் தகுந்த பதிலளிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவுக்கு எதிராக இட்டுக்கட்டப்பட்ட பொய்களுக்குப் பதிலளிக்கும் வகையில் இம்மாத இறுதியில் இருந்து கிராமங்களை உள்ளடக்கி சுமார் 2500 தொடக்கம் 3000 வரையான கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்தப் பொய்யான விளம்பரங்களுக்கு முன்னரே பதிலளிக்காமல் இருப்பது தவறு என்றும் இதன்போது நாமல் சுட்டிக்காட்டி உள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி கோட்டாபய காலத்தில் கரிம உரங்களை அறிமுகப்படுத்தியதை விட மரக்கறிகளின் விலை தற்போது அதிகரித்துள்ளதால், மரக்கறிகளின் விலையை குறைப்பதற்கு குறிப்பிட்ட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் இருந்து தம்மிக்க தற்காலிகமாக விலகல்?

கொழும்பு, ஜன. 21

வர்த்தகர் தம்மிக்க பெரேரா ஜனாதிபதித் தேர்தலில் இருந்து தற்காலிகமாக விலகுவதற்கு தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவதாக வெளியான தகவலை தொடர்ந்து அவர் தற்காலிகமாக விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடத் தயார் என வர்த்தகர் தம்மிக்க பெரேரா முன்னதாக அறிவித்திருந்தார்.

இதன்படி, கட்சி தம்மிடம் 10 நிபந்தனைகளை முன்வைத்துள்ளதாகவும், குறித்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்து ஏப்ரல் முதல் வாரத்தில் தீர்மானம் எடுப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க தயாராக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் பொதுஜன பெரமுன மேற்கொண்ட தீர்மானம் எதிர்வரும் மார்ச் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கையில்....

சர்வதேச கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வினை பிபிசி நடத்தியுள்ளது.

மூன்று மரக்கறிகள், இரண்டு வகையான அரிசி, சீனி மற்றும் ஒரு வகை மீன் மற்றும் இரண்டு வகையான பழங்கள் அடங்கிய ஒரு பையின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் மற்றும் வெளிச்சந்தையில் உள்ள தினசரி சில்லறை விலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் உரிய கணக்கெடுப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2023 ஜனவரியில் கூறப்பட்ட பொருட்கள் அடங்கிய ஒரு பையின் விலை 7,176.00 ரூபாய். 2024 ஜனவரியில் அந்த பையின் விலை 10,454.00 ரூபாய். இது 3,278.00 ரூபாயால் அதிகரித்துள்ளது.

இதன்படி, பொருட்களின் விலை அதிகரிப்பின் சதவீதம் நாற்பத்தாறு சதவீதம் என்று பிபிசி அறிக்கையின் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழரசு....

பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன்.

தமிழரசுக் கட்சித் தேர்தலில் இருந்து ஒருவர் விலகுவதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களுடைய தேசிய அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும் இறைமையைக் காப்பதற்கான இந்த அரசியல் பணியிலே நாங்கள் மூன்று பேர் போட்டியிடுகிறோம். தோல்விப் பயத்தால் ஒருவர் விலகுவதாக கூறப்படுவதால் அது என்னைப்பற்றியதல்ல. ஏனெனில் நான் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

எங்கள் இனத்தின் விடுதலைக்காவும் அடுத்த சந்ததிக்கு எமது இன விடுதலையைக் கடத்திச் செல்வதற்காகவும் நடக்கும் இந்த தேர்தலில் நான் வெற்றி பெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

எக்காரணம் கொண்டும் நான் இந்த தேர்தலில் இருந்து பின்வாங்கவும் இல்லை. விலகவும் இல்லை. - என்றார். (அ)

## அமைச்சரவை....

பதவிகள் வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் அமைச்சுப் பதவிகளுக்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் பெயர் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அவர்களுக்கு இதுவரை அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி தேர்தலில்....

செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தெரிவித்த கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஒருவர், அதற்கான பொருத்தமான வேட்பாளர்கள் பலரை தற்போது பரிசீலித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டில் உள்ள தேசியவாத கொள்கைகளை கொண்ட அமைப்புக்களுடன் கலந்துரையாடிய பின்னர் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகத்தின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை உடனடியாக அரசு மீள பெறவேண்டும்

## ஐ.நா மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 21

**பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை உடனடியாக மீளப்பெறுமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.**

இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அதீத கவனம் செலுத்தியுள்ளதாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் ஊடகப்பேச்சாளர் ரவினா சம்டசானி அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக, இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்வது இலங்கையின் உள்ளகப் பாதுகாப்பு தொடர்பிலான சிறந்த மறுசீரமைப்பின் ஓர் முயற்சியாக காணப்பட்டாலும், உத்தேச புதிய சட்டமூலம் ஊடாக கடந்த காலத்தில் இருந்து நிலவிய மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விடயங்கள் அவ்வாறே இடம்பெறும் அபாயம் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச சட்டத்தில் பயங்கரவாதத்திற்கான வரைவிலக்கணம், தடுப்புக்காவல் உத்தரவின் சட்டபூர்வ தன்மையை சவாலுக்குட்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் இடங்களை பார்வையிடுவதற்கு மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு இருக்கின்ற வாய்ப்புகளை வரையறுக்கும் விடயமும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சர்வதேச மனித உரிமை கொள்கைகளுக்கு ஏற்றாற்போன்று, உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை திருத்தியமைக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

### காசோலையை காண்பித்து மோசடி

# யாழை சேர்ந்த 3 பெண்கள் உள்ளிட்ட 6 பேர் சிக்கினர்!

கொழும்பு, ஜன. 21

காசோலையை வழங்கி 15 மாணிக்கக் கற்களை கொள்வனவு செய்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 பெண்கள் உட்பட 6 பேர் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 24, 30 மற்றும் 36 வயதுடைய பேருவளை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 3 ஆண்களும், 25, 43 மற்றும் 53 வயதுடைய யாழ்ப்பாணம் பிரதேசத்தை சேர்ந்த 3 பெண்களுமாவர்.

சந்தேக நபர்கள் 15 மாணிக்கக் கற்களை கொள்வனவு செய்து அதற்கான தொகையாக 28,750,000 ரூபாவை பணமாக வழங்குவதற்கு மாறாக காசோலை மூலம் வழங்கியுள்ளனர்.

ஆனால் வழங்கப்பட்ட காசோலைக்கான பணம் உரிய வங்கிக்கணக்கில் இருந்திருக்கவில்லை.

இதையடுத்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த 6 பேரையும் பண மோசடி குற்றச்சாட்டில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் கொழும்பு கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் ஏனைய சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் பிரதேசத்திலும் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சனத் நிஷாந்தவுக்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 21

புத்தளம் தளுவ பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றுக்காக சென்ற நீர் வழங்கல் ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, பிரதேச மக்கள் வெளியிட்ட கடும் எதிர்ப்பு காரணமாக அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1 மணியளவில் நடந்துள்ளது.

ராஜாங்க அமைச்சர் தளுவ சந்தியில் இருந்தபோது அங்கு சென்ற பிரதேசவாசிகள் சிலர் அவரை தமது கிராமத்திற்குள் வர வேண்டாம் என தொடர்ந்தும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

தமது கிராமத்தில் இதுவரை எவ்வித அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் வெள்ளத்தில் தமது பயிர்கள் கூட அழிந்த போது எந்த அரசியல்வாதியும் வந்து அது குறித்து தேடிப் பார்க்கவில்லை எனவும் கிராம மக்கள் குற்றம் சுமத்தி யுள்ளார்.

இதனால்,எந்த அரசியல்வாதியும் கிராமத்திற்குள் வர இடமளிக்க போவதில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளார்.

தளுவ நிர்மலபுர தேவாலயத்தின் கூட்டம் நடத்தும் மண்டபம் அரசியல்வாதிகளுக்கு தடை செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ள பிரதேச மக்கள், மக்களுக்காக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செய்ய வேண்டும் என்ற தேவை இருந்தால், அதிகாரிகள் மாத்திரம் வரலாம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், தளுவ சந்தியில் இருந்த ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தனது வாகனத்தில் இருந்து இறங்கி வேறு வாகனத்தில் ஏறி தளுவ கிராமத்திற்கு செல்ல முயற்சித்தார்.

எனினும் கிராம மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக அவர் திரும்பிச் சென்றுள்ளார்.

(அ)

## விண்ணக வாழ்வில் ஆண்டுகள் பதினைந்து!

மலர்வு
10 . 08 . 1932



உதிர்வு
21 . 01 . 2009

**திருமதி**
**மரியதாசம்மா பீற்றர் திசநாயகம்**
**( இளைப்பாறிய ஆசிரியை )**

*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"*

அகிலமதில் அன்புக்கோர் அன்னையாய்
கண்டிப்பும் காருண்யமும் மிக்க ஆசானாய்
பாசமும் பரிவும் கொண்ட சகோதரியாய்
பேரக் குழந்தைகளின் ஆசைப் பேர்த்தியாய்
அன்பைப் பொழிந்து வாழ்ந்தீர்கள்!
எமக்கு அரணாக இருந்த அன்னையே,
காலஓட்டத்தில் எமைப் பிரிந்து
ஆண்டுகள் பதினைந்து கழிந்திட்டாலும்
எங்கள் இதயங்களில் அணையாச் சுடராய்
என்றும் வாழ்வீர்கள்.

*அன்னாரின் ஆத்மா இறைசந்நிதியில் இளைப்பாற பிரார்த்திக்கிறோம்.*

**அன்பு மகள், மருமகன், சகோதரி, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.**

Cergy, France.

# முட்டைக்கு மீண்டும் தட்டுப்பாடு

கொழும்பு, ஜன. 21

இலங்கை சதொச நிலையங்களில் சில நாட்களாக முட்டை தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் இலங்கை சதொச ஊடாக 35 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட போதிலும், அந்த கடைகளில் கொள்வனவு செய்வதற்கு முட்டைகள் கிடைக்கவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைக்கு 14 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளதால் சதொசவில் முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்க தலைவர் அன்டன் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கை கால்நடை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர, கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில், உள்ளூர் முட்டைகள் மற்றும் கோழி இறைச்சிகள் தற்போது சந்தையில் தட்டுப்பாடு இன்றி காணப்படுவதாக தெரிவித்தார்.

இதேவேளை, மீன்களின் விலை குறைவினால், மீன்களுக்கான தேவை அதிகரித்துள்ளதாக மீன் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# அதிகரித்து வரும் இன்புளுவென்சா தாக்கம்!

கொழும்பு, ஜன. 21

இன்புளுவென்சா போன்ற நோய்கள் வழமைக்கு மாறாக அதிகரித்து வருவதையடுத்து காய்ச்சல், இருமல், தொண்டை புண், சளி அல்லது அடைப்பு, தசை அல்லது உடல் வலி, தலைவலி மற்றும் சோர்வு போன்ற அறிகுறிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு சுகாதர நிபுணர்கள் பொது மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

இதன்படி, நவம்பர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையிலும், ஏப்ரல் மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலும் இன்புளுவென்சா வைரஸ் இரண்டு உச்சநிலையில் உள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசகர் வைத்தியர் ஜூட் ஜயமஹா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், கடந்த டிசம்பர் மாதம் மற்றும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் பெறப்பட்ட மாதிரிகளின்படி, 25 வீதம் இன்புளுவென்சா வைரஸ் தோற்று கண்டறியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு, ராகம, களுபோவில, நீர்கொழும்பு வைத்தியசாலைகள், சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலை மற்றும் தொற்று நோய் வைத்தியசாலை உட்பட 20 வைத்தியசாலைகளில் இன்புளுவென்சா போன்ற நோய் குறித்த கண்காணிப்பை அதிகரிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன், இன்புளுவென்சா போன்ற நோய்களால் பாதிக்கப்படக்கூடிய குழுக்களில் கர்ப்பிணித் தாய்மார்கள், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் மற்றும் நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பூமியைக் காக்க உறுதியேற்போம்!

பெ. சிதம்பரநாதன்

அந்நிய தேசங்களின் ராணுவ ஆக்கிரமிப்புகளையும், ஆயுதப் பிரயோகங்களையும் குறித்து அறியும் போதெல் லாம் நாம் வேதனைப்படுகிறோம். ஏவுகணை களால் நாசமாக்கப்பட்ட உக்ரைன் நகரங்களையும், இஸ்ரேல் நகரங்களையும், காஸா பகுதிகளையும் பார்க்கிறபோது, நமது மனம் துடிக்கிறது. காரணம் அங்கெல்லாம் கொல்லப்படுபவர்கள் குழந்தைகளாகவும் முதியவர்க ளாகவும் இருப்பதுதான்.

இச்சம்பவங்கள் பயங்கரவாத சிறுபான்மை செயல் களைக் காட்டுகின்றன. இதனால்தான் ‘கெட்ட போரி டும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்’ என்று பாவேந் தர் பாரதிதாசன் பாடினார். பூமியைப் பூவுலக மாகவும், பூவுலகத்தைப் பூக்களின் நந்தவனமாகவும் நிச்சயப்படுத்த முடியாமல் நிம்மதி இழந்து நிற்கிறோம்.

இப்பூவுலகை சென்ற நூறாண்டுகளில் அழித்து வரும் சக்திகள் எவை? பெட்ரோல், டீசல், நிலக்கரி முதலிய எரிபொருள்கள்தான் இப்பூவுலகை நரகமாக்கிவிடு கின்றன.

எரிபொருள்கள் இல்லாமல் வாகனங்களை இயக்க முடியாது. வாகனங்கள் இல்லாமல் மனிதர்களின் வேகமான நகர்வுகள் சாத்தியமில்லை. பூவுலக வாழ் வுக்கு இந்தப் புதை எரிபொருள்கள்தான் உயிரோட் டமாக இருக்கின்றன.

இவை இல்லையெனில் பூமியில் மனித வாழ்க்கை ஸ்தம்பித்துப் போய்விடும். ஓட்டத்திலும், இயக்கத்தி லும் சுற்றிச் சுழல்வதிலும்தான் உயிரோட்டமே சுரக்கிறது.

நீரோட்டம், காற்றோட்டம், ரத்த ஓட்டம் பற்றி எண்ணிப் பார்த்தால்தான் அவற்றின் மெய்ப்பொருள் புரியும். நீர் நச்சாகிக்கொண்டு வருகிறது. காற்று மாசாகி வருகிறது. ரத்தமும் அசுத்தமாகி வருகிறது. வனப்பரப்பு குறைந்து வருகிறது. மக்கள்தொகை அதிகமாகி வருகி



றது. பனிப் பாறைகள் உருகி வருகின்றன. அதனால் கடல்மட்டம் பெருகி வருகிறது. பூமிப் பரப்போ சுருங்கி வருகிறது.

இதற்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்றுதான். இந்தப் பூமியானது நூறாண்டுகளுக்கு முன்பிருந்த பச்சைவள பூமியாக இல்லை. நச்சு அதிகரித்த பூமியாக, நரக பூமி யாகி வருகின்றது.

இது எதனால்? 14 டிகிரி செல்ஷியஸாக இருந்து வந்த இப்பூமியின் வெப்பம், சென்ற நூறாண்டுகளில் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. மனித உடல் 98.6 டிகிரி செல்ஷியஸ் வெப்பத்தைத்தான் தாங்கும். அதற்கு மேல் 0.1 சதம் அதிகரித்தால்கூட, நம் உடம்பு கொதிக்கி றது. காய்ச்சலைத் தாங்க முடியாமல் முணங்குவோம்.

இதேபோலத்தான் பூமியின் உடம்பு கொதிக்கத் தொடங்கிவிட்டது. இதைத்தான் புவி வெப்பமயமாதல் என்கிறோம்.

புவி என்பது ஒரே ஒரு நாடல்ல. 198 நாடுகளும் அத னுடன் இந்தப் பூமிப் பரப்பைப் போல இருமடங்கு கடல்களும், மலைகளும், வனங்களும், எறும்பு முதல் யானை வரையுள்ள உயிரினங்களும் அதில் உள்ளன. பஞ்ச பூதங்களான நீர், நிலம், நெருப்பு, காற்று, வெளி இவை அனைத்துமே இந்த நிலத்திற்குரிய உடமைகள். இவற்றை பராமரிப்பதுதான் தெய்வீகமானது. பாழ்படுத்துவது சைத்தானின் வேலை.

பூமியிலிருந்து வெகு உயரத்திலுள்ள ஓசோன் படலத் தில் ஓட்டை விழுந்துவிட்டது என்றும், அதன் வழியா கப் புறஊதாக் கதிர்கள் பூமிப் பரப்பில் மேல் பாயுமா னால், நமது பருவக் காலங்களே மாறிவிடும் ஆபத்து நிகழும் என்றும் கூறுகிறார்கள் விஞ்ஞானிகள்.

நந்தவனமாகக் கிடந்த இந்தப் பூமி மயானமாகி வருகிறது. 31 ஆண்டுகளுக்கு முன்பு 1980-களில்தான்



நாடுகளைப் பற்றியே சிந்தித்த மனிதன், பூமியைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கினான்.

விவசாய உற்பத்திகளிலிருந்து தொழில் புரட்சிக்கு ஐரோப்பிய நாடுகள் வித்திட்டபோது, எந்திரங்களை ஆட்டிப்படைத்த மனிதன், அந்த எந்திரங்களுக்கே அடிமையாகிவிட்டான்.

எந்திரங்கள் இயங்க வேண்டுமானால் எரிபொருள் அவசியம். எரிபொருள்கள் பூமிக்குள் உறங்கிக் கொண்டி ருந்த வரை, பூமியின் வெப்பம் சீராகவும், மாறாமலும் இருந்து வந்தது. பூமியைத் தோண்டத் தொடங்கி, பூமிக்குள்ளிருந்து எரிபொருள்களை எடுத்து எரித்த போதுதான் இந்தப் பூமியின் வெப்பம் கூடுதலாகியது.

இக்கூடுதல் வெப்பம் கட்டுப்படுத்தப்படாவிட்டால், புவியை அது வாழத் தகுதியற்றதாக்கிவிடும் என்ற புரிதல் இப்போதுதான் நமக்கு ஏற்பட்டுள்ளது. கால நிலை மாறுவதைப் பற்றிய கவலை எல்லா நாடுகளுக் கும் ஏற்படத் தொடங்கிவிட்டது.

பூகம்பம், புயல், சுனாமி, எரிமலை முதலிய பேரிடர் கள் பூமியையே நாசப்படுத்திவிடக் கூடியவை தான். அவற்றில் புயலை மட்டும்தான் நமது விஞ்ஞானிகள் முன்கூட்டியே கணித்துக் கூறு கிறர்கள். மற்ற பேரிடர்களைப் பற்றிய கணிப்பு போதுமான அளவுக்கு இல்லை.

14 சத செல்ஷியஸ் புவி வெப்பம் என்பது, 15.5 சதமாக அதிகரித்துவிடுமோ என்று விஞ் ஞானிகள் கவலை அடைந்துள்ளனர். 1.5 சத அதிக வெப்பத் தைக் குறைத்தால் மட்டும்தான் இந்தப் பூமியில் நாம் வாழ முடியும்.

வெப்பநிலையைச் சமாளிக்க முடியா மல்தான் டைனோசர்கள் அழிந்தன. நமது நாட்டின் பறவையான அன்னப்பறவை இன்று இல்லை. அனிச்ச மலரும் இல்லை.

உயிரினங்கள் அழிவதற்கு புவிவெப்பமே காரணம். 1945-இல் நடந்த உலக யுத்தத்தில் ஆயுதங்களால் 5 கோடி பேர் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதே சமயத்தில் அணு ஆயுதத்தின் கோரத்தையும் ஜப்பானில் பார்த்தோம்.

அணு ஆயுதத்தைப் போன்றதுதான் புவிவெப்பம் என்பது. இது புறப்பட்டு வெளிவருவது புதை எரி பொருள்களிலிருந்துதான். இந்த எரிபொருள்களிலிருந்து கரிமம் வெளியாகிறது. இதைக் கார்பன்-டை-ஆக்சைடு என்று வேதியியல் விளக்குகிறது. இது தாவரங்களுக்கு மிகவும் தேவை.

மரங்கள் இந்தக் கார்பனை உள்வாங்கிக் கொண்டு, ஆக்சிஜன் என்ற உயிர் வாயுவை வெளியிடுகிறது. நமக்கு உயிர்வாழ அது அவசியம். நாம் வெளியிடும் கரிமம் மரங்களுக்குத் தேவை.

மணலைச் சுரண்டினால் ஆறு அழிந்துவிடுவது போல, நிலக்கரி கச்சா எண்ணெயை உறிஞ்சியெடுத்து எரித்தால், அது பூமியையே சிதைத்துவிடும் என்பது உண்மை.

இதனைப் பற்றி விரிவாக விவாதிக்க துபையில் சென்ற 2023 நவம்பர் - டிசம்பர் மாதங்களில் 198 நாடுகள் கூடின.

நமது தொழிற்சாலைகள் இயங்க நிலக் கரியை எரித்து, மின்சக்தியை உற்பத்தி செய்து வருகிறோம். நிலக்கரி எரிப்பு சீனா விலும், இந்தியாவிலும்தான் இப்போதும் அதிகமாக நீடித்து வருகிறது. ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் குறைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

பெட்ரோலிய நாடுகளான வளைகுடா நாடுகளின் ஒத்துழைப்பு இதற்கு மிகமிகத் தேவை. இதனைச் சுட்டிக்காட்டுவது போலவே, சென்ற டிசம்பரில் துபையில் நடந்த இந்த மாநாடு நடந்தது.

இந்த எரிபொருள்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலை மாசுப்படுத்தாத சூரியஒளி மின்சக்தி, காற்றாலை மின் சாரம், புனல் மின்சக்தி, சர்க்கரை ஆலை மின்சக்தி ஆகியவற்றை நோக்கி நாம் நகரக் கடமைப்பட்டிருக்கி றோம். இதில் எந்த நாட்டுக்கும் விதிவிலக்கு இல்லை. பூமி நாசமானால் நாடுகள் நாசமாகும்.

துபை மாநாடு புவிவெப்பத்தைக் குறைக்க ஓர் இலக்கை நிர்ணயித்துள்ளது. 1.5 சத செல்ஷியஸ் என் பது அந்த இலக்கு. தற்போது அதில் 1.2 சத செல்ஷியஸ் வெப்பத்தை நாம் அடைந்துவிட்டோம். இதனைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபடத் தாமதித்தால், இன்னும் 10 ஆண்டுகளிலேயே புவி வெப்பம் 1.5 செல்ஷியஸை அடைந்துவிடும். ஆகவே இது மிகமிக அவசரமானது.

இத்தருணத்தில் எரிபொருள் இறக்குமதி செய்யாத நாடாக இந்தியா மாற வேண்டும் என்று மத்தியமைச்சர் நிதின் கட்கரி கோவாவில் சென்ற டிசம்பரில் பேசி யுள்ளது நினைவுகூரத்தக்கதாகும்.

இதற்காக அவர் அளித்த விளக்கம் மிகவும் புதுமை யானது. இந்த இறக்குமதிகளைக் குறைப்பதும் ஒருவகை தேசபக்தி என்று கூறியுள்ளார். அதுதான் புதிய சுதந்திரம் என்றும் பேசியுள்ளார். அதுமட்டுமல்ல பெட்ரோல், டீசல், நிலக்கரி இறக்குமதியை நிறுத்துவது பயங்கர வாதத்தையும் அழிக்கும் என்றும் சுட்டிக் காட்டியுள் ளார். நமது நாடு பெட்ரோல், டீசல் இறக்குமதிக்காக ஆண்டுதோறும் ரூ. 16 லட்சம் கோடியைச் செலவிட்டு வருகிறது என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

நமது மத்திய அரசின் மொத்த வரி வருமானமே ரூ. 27 லட்சம் கோடி. இதில் பாதிக்கும் மேலாக எரி பொருள் செலவுக்குச் செல்கிறது. வாகனங்களுக்கு இது தேவை. வாகனத் துறையில் உள்ள வாகனங்களின் மதிப்பு இப்போது ரூ. 12.5 லட்சம் கோடி. வாகனங்க ளின் உற்பத்தியில் பணி செய்பவர்கள் 4.5 லட்சம் பேர்.

இவர்களுக்குப் பணிப்பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. எரிபொருளுக்கு மாற்றாக மின்சார வாகனங்கள் அதிகளவு பெருக வேண்டும்.

எரிபொருளால் பூமி வெப்பத்தை அதிகரிக்கும் கார்பன் உற்பத்தி குறைந்தால் சுற்றுச்சூழல் சுத்தமாகத் திகழும். தேசத்தைக் காப்பதுதான் தேசபக்தி என்றால், இந்த இறக்குமதியை ஒழிப்பது தேசபக்தி மட்டுமல்ல, உலக பக்தியுமாகும்.

இந்தியாவில் 541 சர்க்கரை ஆலைகள் உள்ளன. கரும்புச் சக்கை என்ற பகாசிலிருந்து இந்த ஆலைகள் 3,500 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. இந்த மின்சாரத்தை ஆலைகளின் சுற்றுவட்டாரத்திற்குப் பயன்படுத்தலாம்.

தமிழகத்தில் நெய்வேலியிலுள்ள நிலக்கரி சுரங்கத் தில், அனல் மின்சாரத்திற்கு மூன்று கோடி டன் பழுப்பு நிலக்கரி ஆண்டுதோறும் தோண்டி எடுக்கப்படுகிறது. அதன்மூலம் 11 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. பழுப்பு நிலக்கரியும் நமக்கு வேண்டாம் அணுமின்நிலையங்களும் நமக்கு வேண் டாம். மரபுசாரா மின்சாரத்தை உற்பத்தி செய்தாலே பூமி வெப்பத்தைக் குறைக்கலாம்.

இந்தியா 11 கோடி தொன் நிலக்கரி இறக்குமதி மூலமாகத்தான், தமது 70 சதவிகித மின்சார உற்பத்தியை செய்து வருகிறது. இனிமேலும் இந்தக் கரிம வெப்பத்தைப் புவி தாங்காது. இந்தியா 2030-க்குள் ஒரு கோடி டன் எரிபொருளைக் குறைக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. 2070-ஆம் ஆண்டுக்குள் பூஜ்யம் அளவுக்கு இதைச் செய்யப் போவதாகவும் கூறியுள்ளது.

இதற்கான பிரகடனம்தான் ‘ஒரே குடும்பம் - ஒரே பூமி - ஒரே எதிர்காலம்” என்ற பாரதத்தின் அறிவிப்பா கும். பூமியைக் காப்பாற்றினால்தான் தேசத்தைக் காப்பாற்ற முடியும். பூமியைக் காப்பாற்ற அனைவரும் உறுதியேற்போம்.

